KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons) (வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 32, 07 மார்ச் 2025 இதழ்:- 10

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
office@nishanthanlaw.onmicrosoft.com
Fax 1-800-878-1348
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## மீண்டும் கிழக்கில் முஸ்லிம் தீவிரவாதம்! வடக்கில் கிறீஸ் பூதம் புறப்படுகிறதா?




இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் இஸ்லாமிய தீவிரவாத சிந்தனைகளை பரப்பும் நோக்கில் செயல்படும் முஸ்லிம் அமைப்பு அடையாளம் காணப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ (3ம் பக்கம் பார்க்க)





## நல்லிணக்கம் - பொறுப்புக்கூறல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்ட மக்களின் ஆதரவைப் பெற்றதாக - சர்வதேச தராதரத்தினைப் பூர்த்தி செய்வதாக இருக்க வேண்டும் - அனுசரணை நாடுகள்

இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் முழுமையான நல்லிணக்க மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்ட மக்களின் ஆதரவை பெற்றதாக கடந்தகால பரிந்துரைகளின் மேல் கட்டியெழுப்பப்பட்டதாக சர்வதேச தராதரத்தினை பூர்த்தி செய்வதாக காணப்படவேண்டும் என இணை அனுசரணை நாடுகள் (4ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
**eelanadu.ca**
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்



## அரச பாதீடு:- மாற்றமா? ஏமாற்றமா?



அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தின் மீதான விவாதம் பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியில் சமூக, அரசியல் மட்டத்திலும் பொருளாதார வட்டாரங்களிலும் நடந்து கொண்டிருக்கிறது. இது ஒரு மாறுதலான வரவு செலவுதிட்டம். மக்கள் நலன், தேசியப் பொருளாதார வளர்ச்சி போன்றவற்றை முன்னிலைப்படுத்தியதாக இந்த வரவு செலவுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது என்கிறது அரசாங்கம். அரசாங்கத்தை ஆதரிப்போரின் கருத்தும் இதுவே. (17ம்பக்கம் பார்க்க)

**ஈழநாடு**

எதிர்பாருங்கள்! பத்திரிகையின் 32வது ஆண்டு விழா
01 யூன் 2025 ஞாயிற்றுக்கிழமை விபரங்கள் உள்ளே!

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600


THINKING OF
SELLING OR BUYING A HOME?
www.AgentSiva.com
Your neighborhood sales representative
PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!
RE/MAX REALTRON Realty Inc. Brokerage
Home of the Top Producers
Siva Kandiah
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com
Piravien Siva
Sales Representative B.Comm.
Dir: 647-221-5220
piravien@gmail.com
22 Years Real Estate Experience
885 Progress Ave #209, Scarborough, ON. M1H 3G3
Independently owned and operated
Bus: 416-289-3333
• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY
Warden/Finch
Scarborough $424,900
2 Beds • 1 Baths • 6 Rooms
Walking distance to school
Kennedy / Hwy 401
Scarborough $429,900
1 Beds • 1 Baths • 5 Rooms
Newly Renovated Unit
Markham / Sheppard Ave
Scarborough $479,000
1 Beds • 1 Baths • 3 Rooms
Corner Condo Townhouse
McCowan / Ellesmere
Scarborough $599,000
2 Beds • 2 Baths • 5 Rooms
Just A Short Walk To STC
Mccowan & Hwy 401
Scarborough $549,900
2 Beds • 2 Baths • 5 Rooms
Corner suite, unobstructed views
Kennedy / 401
Scarborough $538,000
2 Beds • 1 Baths • 5 Rooms
Open Concept Living-Dining
Simcoe St / 401
Oshawa $575,900
3+1 Beds • 2 Baths • 5+1 Rooms
Newly Painted, 1100+ Sqft
Grandview Dr. / Bloor
Oshawa $649,800
2+2 Beds • 2 Baths • 7+4 Rooms
Upgraded floor, Newly renovated
9TH LINE / HIGHWAY 7
Markham $1,100,000
4 Beds • 4 Baths • 9 Rooms
luxury freehold townhouse
Dixie/ Glenanna
Pickering $799,000
3 Beds • 2 Baths • 6 Rooms
Great area close to all amenities
Audley Rd & Rossland Rd E
Ajax $799,000
3 Beds • 3 Baths • 8+3 Rooms
No maintenance fees Townhouse
Markham & Ellesmere
Scarborough $1,050,000
3+1 Beds • 2 Baths • 6 Rooms
Fin.basement with sep.entrance
Morningside/Mcnicol
Scarborough $1,099,900
3 Beds • 3 Baths • 7+2 Rooms
Hardwood flooring throughout
401/Morningside
Scarborough $1,249,000
4+2 Beds • 4 Baths • 12 Rooms
Easy access to the new 407
10th Line/ Hoover Park Dr
Stouffville $1,499,999
4+1 Beds • 4 Baths • 10 Rooms
3,162 Sqft ,Upgrades Designed
9th Line/Hoover Park
Stouffville $999,000
4 Beds • 3 Baths • 8 Rooms
Modern Living Elegant Upgrades

# மீண்டும் கிழக்கில் முஸ்லிம் தீவிரவாதம்! வடக்கில் கிறீஸ் பூதம் புறப்படுகிறதா?







இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் இஸ்லாமிய தீவிரவாத சிந்தனைகளை பரப்பும் நோக்கில் செயல்படும் முஸ்லிம் அமைப்பு அடையாளம் காணப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்திருக்கின்றார். இது தொடர்பில் பொலிஸ் புலனாய்வுத்துறை மேலதிக தகவல்களை கண்டறியும் நோக்கில் உரிய நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

மிகவும் தெளிவாக முஸ்லிம் அமைப்பு என்று கூறுவதிலிருந்து விடயத்தின் தார்ப்பரியத்தை புரிந்து கொள்ள முடியும். இது அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் புதிய சவாலாகவும் அதே வேளை தற்போது அரசாங்கம் காண்பித்து வரும் மென்மையான அரசியல் முகத்தை தொடர்ந்தும் பேண முடியாமல் போகும் நிலைமையையும் ஏற்படுத்தலாம். விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போது இஸ்லாமிய அடிப்படைவாத குழுக்கள் தொடர்பான பார்வையை இலங்கை அரசு புறம் தள்ளியே வந்திருக்கின்றது. அதற்குமப்பால் யுத்த காலத்தின் தேவைக்காக ஊர்காவல் படைக் கட்மைப்பையும் பேணி வந்திருக்கின்றது.

இந்தப் பின்னணியில் இஸ்லாமிய அடிப்படைவாதக் குழுக்கள் சுதந்திரமாக காலூன்றுவதற்கான வாய்ப்பும் உருவாகியது. கிழக்கு மாகாணம் தங்களுக்கானது என்னும் சிந்தனையும் மெதுவாக முஸ்லிம் குழுக்கள் மத்தியில் சந்தடியின்றி வளர்ந்தது. அதன் விளைவே இஸ்லாமிய அடிப்படைவாத சிந்தனையை பேணி வளர்ப்பதற்கான வாய்ப்பையும் சூழலையும் கனியச் செய்தது. கடந்த ஆண்டு, ஒக்ரோபர் மாதம், கிழக்கிலங்கையின் அறுகம் குடாவில் தங்கியிருந்த இஸ்ரேலியர்களை தாக்குவதற்கு திட்டம் தீட்டுமளவுக்கு சர்வதேச இஸ்லாமிய தொடர்புகள் கிழக்கில் வலுவாக இருந்திருக்கின்றன.

இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகள் கிழக்கில் வளர்வதற்கான சூழலை கண்டும் காணாமல் விட்டதன் விளைவாகவே, ஈஸ்டர் தாக்குதல் இடம் பெறுவதற்கான சூழல் உருவாகியது. கிழக்கிலங்கையில் இயங்கும் முஸ்லிம் மத அமைப்புகள் மற்றும் அடிப்படைவாத குழுக்கள் தொடர்பில் தீவிரமான அவதானத்தை இலங்கை படைத்துறை வைத்திருந்தால், அவ்வாறானதொரு தாக்குதல் இடம் பெறுவதற்கான புறச் சூழல் கனிந்திருக்காது.

கிழக்கிலங்கையை குறிப்பாக காத்தான்குடியை அண்டிய முஸ்லிம்களின் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டே இஸ்லாமிய அரசுக்கான ஆதரவுச் சிந்தனைகள் வேரூன்றியிருக்கின்றன. ஆனால், இந்த விடயத்தில், கோட்டாபய தரப்பின் உள்ளூர் அரசியல் தொடர்பு அதிகம் முதன்மைப்படுத்தப்பட்டதால், இஸ்லாமிய தீவிரவாத சிந்தனைக்கான களம் தொடர்பிலும், அதனைத் தொடரக் கூடிய குழுக்கள் மீளெழுச்சி பெறலாம் என்னும் விடயங்கள் இரண்டாம் பட்சமாக்கப்பட்டன.

முஸ்லிம் அரசியல்வாதிகளும் ராஜபக்ஷக்களை முன்வைத்து கருத்துக் கூறினார்களே தவிர, தங்கள் சமூகத்துக்குள் இவ்வாறான சிந்தனை கொண்டவர்கள் இருக்கின்றார்கள் என்பதை பொது வெளிகளில் ஏற்றுக்கொள்ளும் அரசியல் துணிவற்றவர்களாகவே இருக்கின்றனர்.

பிள்ளையான் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட போது அதனை முஸ்லிம் அரசியல்வாதிகள் இரசித்தனர். ஆனால், தற்போது அமைச்சரவை பேச்சாளர் வெளியிட்டிருக்கும் கருத்து தொடர்பில் எவ்வாறான பதிலைக் கொண்டிருக்கின்றனர்? இந்த விடயமானது, கிழக்கிலங்கையில் வாழும் ஈழத் தமிழ் மக்களுக்கும் ஓர் அபாய எச்சரிக்கையாகும்.

இந்நிலையில் கடந்த வாரம் நாடாளுமன்றில் உரையாற்றிய ஜனாதிபதி அவர்கள், வடக்கு கிழக்கு பிரதேசத்திலும் ஆயுத ரீதியான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக தெரிவித்திருந்தார். இந்நிலையில், கிழக்கு மாகாணத்தில் வாள் வெட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ள நிலையில், அடிப்படைவாத அமைப்புக்கள் இருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இவற்றை அடிப்படையாக வைத்துப் பார்க்கின்ற போது வடக்கில் கடந்த காலங்களில் கிறிஸ் பூதங்கள் ஏவி விடப்பட்டது போன்று மீண்டும் சம்பவங்கள் அரங்கேற்றப்பட்டு விடுமோ என்ற அச்சம் இருப்பதாகவும் இது தொடர்பாக மக்களும் ஊடகங்களும் விழிப்பாக இருக்க வேண்டும். எனவே தற்போதைய அரசாங்கம் தங்களுடைய இயலாமைகளை மறைப்பதற்காக எமது மக்களை மலினப்படுத்தும் வகையிலான செயற்பாடுகளையும் சுமூகமான சூழலுக்கு குழப்பங்களை ஏற்றபடுத்தும் கருத்துக்களையும் வெளிப்படுத்தக் கூடாது.

யாழ். மாவட்டத்திலிருந்து ஜே.வி.பி. சார்பில் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகி இருக்கின்ற றஜீவன் ஜெயானந்தமூர்த்தி முகப்புத்தகத்தில் ஒரு செய்தி வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதாவது யாழ். மாவட்டத்தில் காணப்படுகின்ற போதைப் பொருள் பாவனை அதிகரிப்பு தொடர்பாக தனிநபர் பிரேரணையை கொண்டு வரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான செயற்பாடுகள் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் முன்னெடுக்கப்படுகின்றவா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. கடந்த காலங்களுடன் ஒப்பிடுகின்ற போது எமது பிரதேசங்களில் போதைப் பொருள் பாவனை அதிகரித்திருக்கிறது.

சமூக சீர்கேடுகள் அதிகரித்துள்ளன அவை கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதில் மற்றுக் கருத்தில்லை ஆனால் நாடாளுமன்றில் தனிநபர் பிரேரணை கொண்டு வரும் அளவிற்கு யாழ்ப்பாணத்திற்கு தனித்துவமான பிரச்சினை அல்ல. போதைப்பொருள் பாவனை என்பது நாடாளாவிய ரீதியில் இருக்கின்ற பிரச்சினை கடந்த வாரம்கூட, கொழும்பில் நீதிமன்றத்தினுள் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறான சூழலில் யாழ்ப்பாணத்தில் போதைபொருள் பாவனை அதிகரித்திருப்பதாக தனிநபர் பிரேரணை கொண்டு வருவது யாழ்ப்பாணத்தின் தனித்துவங்களையும், கௌரவத்தினையும் மலினப்படுத்துப்படுத்தும் நிகழ்ச்சி நிரலை அடிப்படையாக கொண்டதோ என்ற சந்தேகத்தினை ஏற்படுத்துகின்றது.


**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com


## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**


ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.


அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**


**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# நல்லிணக்கம் - பொறுப்புக்கூறல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்ட மக்களின் ஆதரவைப் பெற்றதாக - சர்வதேச தராதரத்தினைப் பூர்த்தி செய்வதாக இருக்க வேண்டும் - அனுசரணை நாடுகள்



இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் முழுமையான நல்லிணக்க மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்ட மக்களின் ஆதரவை பெற்றதாக கடந்தகால பரிந்துரைகளின் மேல் கட்டியெழுப்பப்பட்டதாக சர்வதேச தராதரத்தினை பூர்த்தி செய்வதாக காணப்படவேண்டும் என இணை அனுசரணை நாடுகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

பிரிட்டன் வடஅயர்லாந்து கனடா மலாவி மொன்டிநீக்ரோ வடக்கு மசடோனியா ஆகிய நாடுகள் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது இலங்கையில் கடந்த வருடம் தேர்தல்கள் அமைதியான முறையில் இடம்பெற்றதையும் அமைதியான ஆட்சி மாற்றத்தையும் நாங்கள் வரவேற்கின்றோம்.

புதிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பையேற்று நான்கு மாதங்களே ஆகின்றன என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். இலங்கை இந்த மாற்றத்தை பயன்படுத்தி தான் எதிர்கொண்டுள்ள சவால்களிற்கு தீர்வை காண முயல வேண்டும் என நாங்கள் ஊக்குவிக்கின்றோம்.

நல்லிணக்க விடயங்கள் அர்த்தபூர்வமான முன்னேற்றத்தை ஏற்படுத்துவது குறித்த அரசாங்கத்தின் அர்ப்பணிப்பதையும் நிலங்களை மீள கையளிப்பது வீதித்தடைகளை அகற்றுவது வடக்கு கிழக்கில் உள்ள மக்கள் தங்கள் அன்புக்குரியவர்களை கடந்த காலங்களை நினைவுகூர அனுமதிப்பது ஆகிய ஆரம்ப கட்ட நடவடிக்கைகளையும் நாங்கள் வரவேற்கின்றோம்.

நம்பிக்கையை கட்டியெழுப்பி அது தொடர்ந்தும் நீடிக்கச் செய்வதற்கு சிவில் சமூகத்தினருக்கான தளத்தினை பாதுகாப்பது அவசியம் சிவில் சமூக செயற்பாட்டாளர்களை கண்காணிப்பது துன்புறுத்துவது போன்ற நடவடிக்கைகளை நிறுத்தவேண்டும்.

இலங்கையின் அரசமைப்பின் அடிப்படையில் அதிகாரங்களை பகிர்வதற்கான ஆட்சி முறை சீர்திருத்தங்களில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான அர்ப்பணிப்பை நாங்கள் வரவேற்கின்றோம்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை மாற்றீடு செய்வது குறித்த தனது நோக்கத்தை அரசாங்கம் வெளியிட்டுள்ளதை நாங்கள் கருத்தில் கொண்டுள்ளோம். புதிய சட்டம் சர்வதேச தராதரங்களிற்கு ஏற்ற விதத்தில் காணப்படவேண்டும் என நாங்கள் மீளவலியுறுத்துகின்றோம்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்யவேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

ஊழல் ஒழிப்பு மற்றும் மனித உரிமை விவகாரங்களில் முன்னேற்றத்தை காண்பதற்கு அரசாங்கம் முயலும் தருணத்தில் எந்தவொரு முழுமையான நல்லிணக்க மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாடுகளும் பாதிக்கபபட்ட மக்களின் ஆதரவை பெற்றதாக கடந்தகால பரிந்துரைகளின் மேல் கட்டியெழுப்பப்பட்டதாக சர்வதேச தராதரத்தினை பூர்த்தி செய்வதாக காணப்பட வேண்டும் என நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

காணாமல் போனோர் மற்றும் இழப்பீடுகள் தொடர்பான உள்நாட்டு அமைப்புகளின் பணிகளை மீண்டும் ஊக்கப்படுத்த வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம்.

# தண்டனையில் இருந்து தப்பிக்கும் கலாசாரத்தை நிறுத்தி பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தி நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமென ஐ.நா.மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வலியுறுத்தல்

இலங்கையில் நீண்டகாலமாக நிலவிவரும் தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டு வந்து பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கும், இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கும் இதுவே சரியான தருணம் எனச் சுட்டிக் காட்டிய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் சார்பில் உரையாற்றிய பேரவைத்தலைவர், அரசாங்கத்தினால் பிரேரிக்கப்பட்டுள்ள உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு செயன்முறை குறித்து தமது வரவேற்பை வெளியிட்டுள்ளார்.




ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத்தொடர் கடந்த 24 பெப் 2025 திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது. இக்கூட்டத் தொடரில் 03 மார்ச் 2025 திங்கட்கிழமை ஆரம்பமான அமர்வில் இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' எனும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் அதன் சமகால நிலைவரம் தொடர்பான ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கின் வாய்மொழிமூல அறிக்கை பேரவைத் தலைவரால் வாசிக்கப்பட்டது.

அதன்படி இலங்கையில் கடந்த ஆண்டு நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் பரந்துபட்ட மக்கள் ஆணையைப்பெற்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சி பீடமேறியதாகவும், புதிதாகத் தெரிவான பாராளுமன்றத்தில் ஆற்றிய கொள்கைப்பிரகடன உரையில் நாட்டில் நீண்டகாலமாக நிலவும் பிரிவினைகளைக் களைந்து, இனங்களுக்கு இடையில் தேசிய ஒற்றுமையையும், நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டு அர்ப்பணிப்புடன் செயலாற்றத் தயாராக இருப்பதாக உறுதியளித்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

அதேபோன்று உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை முன்னெடுத்து, நீதியை நிலைநாட்டுவதாக ஜனாதிபதியினால் அளிக்கப்பட்ட வாக்குறுதி குறித்து வரவேற்பு வெளியிடப்பட்டதுடன், இலங்கையில் இடம் பெற்ற கடந்தகால மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை முன்னெடுக்க வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

அதேவேளை உண்மை மற்றும் நீதிக்காக நீண்டகாலமாகப் போராடி வரும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் குறித்து சுட்டிக் காட்டப்பட்டதுடன், அவர்களுக்கான தீர்வை வழங்கக் கூடிய வகையில் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் செயற்திறனான முறையில் இயங்கவேண்டியது அவசியம் என வலியுறுத்தப்பட்டது.

அத்தோடு பயங்கரவாதத்தடைச்சட்டம் மற்றும் நிகழ்நிலைக்காப்புச்சட்டம் உள்ளிட்ட சட்டங்கள் உரிய நியமங்களுக்கு அமைவாகத் திருத்தியமைக்கப்பட வேண்டும் எனவும், வட, கிழக்கு மாகாணங்களில் சிவில் செயற்பாட்டாளர்கள் மீதான கண்காணிப்புக்கள் தொடர்வதாகத் தமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருக்கும் நிலையில், அவை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, சிவில் சமூக செயற்பாடுகளுக்கான இடைவெளி உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டது.

மேலும் நீண்டகாலமாக நிலவிவரும் தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கும் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கும் இதுவே சரியான தருணம் எனச் சுட்டிக்காட்டப்பட்டதுடன், அரசாங்கத்தினால் பிரேரிக்கப்பட்டுள்ள உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு செயன்முறை குறித்து வரவேற்பு வெளியிடப்பட்டது.

## ஜனாதிபதி கூறியபடியே மட்டக்களப்பில் குழப்பங்கள் என சாணக்கியன் தெரிவிப்பு!

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதாள குழுக்களால் குழப்பங்கள் ஏற்படலாம் என்று ஜனாதிபதி பாராளுமன்றத்தில் அண்மையில் கூறியிருந்த நிலையில் அவர் கூறியது போன்று அங்கு சம்பவங்கள் நடப்பதாகவும் இது தொடர்பில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்றும் இலங்கை தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்து சாணக்கியன் எம்.பி இவ்வாறு கூறினார். கடந்த பெப்ரவரி 20ஆம் திகதி ஆரையம்பதியில் வாள்வெட்டு சம்பவமொன்று நடந்தது. சம்பந்தப்பட்டவர்கள் இன்னும் கைதாகவில்லை என்று மக்கள் போராட்டம் நடத்தினர். அதனை தொடர்ந்து மட்டக்களப்பு கல்லடியில் வாள்வெட்டு குழுவால் திங்கட்கிழமை கத்திவெட்டு சம்பவமொன்று நடந்துள்ளது. ஜனாதிபதி பாராளுமன்றத்தில் வரவு- செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றும் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதாள குழுக்களால் சில குழப்பங்கள் ஏற்படலாம் என்று கூறியிருந்த நிலையில் கல்லடியில் குற்றச் செயலொன்று நடந்துள்ளது. அதேபோன்று தான் ஒரு வாரத்திற்கு முன்னர் ஆரையம்பதியில் நடந்துள்ளது. இது தொடர்பில் அவசரமாக கரிசனை எடுத்து முடிவு காண வேண்டும் என்றார்.

# கனடா வாழ் கருணையாளர்களே!





என் இனிய உறவுகளே! 13 ஆண்டுகளுக்கு முன் எமது இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது இந்தக் குழந்தைகள் போன்றவர்களை வாரி அணைத்து 86 குழந்தைகளோடு ஆரம்பித்து இன்று 423 குழந்தைகளின் அன்பு நிறைந்த இடமாக அன்பு இல்லம். பாரதி இல்லம். செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இலங்கங்கள் திகழ்கின்றன.

மூன்று வேளை உணவு. உடை. உறையுள் மட்டுமன்றி கல்வி மேம்பாடு விளையாட்டு. பரதநாட்டியம் என பல்வேறு துறைகளிலும் எமது இல்லக் குழந்தைகள் முன்னணி வகித்து வருகின்றார்கள்.

அன்பர்களே! அருகே காணப்படும் குழந்தைகள் போல் பலர் இன்றும் ஆலய வீதிகளிலும் கடையோரங்களிலும் நிற்கும் குழந்தைகளைப் பொறுப்பேற்க முன் வருமாறு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் இருந்து தொடர்ச்சியாகக் கோரிக்கைகள் விட்டப்பட்டு வருகின்றன. ஆனால் எம்மால் பொறுப்பேற்க முடியாதுள்ளமைக்கு எமது இல்லத்தின் நிதி நெருக்கடியே பிரதான காரணமாகும்.

உறவுகளே! உங்கள் கருணையினை இவர்கள் பக்கமும் திருப்புங்கள்! எமது சந்ததியை நாமே காப்பாற்றுவோம்! ஒரு இல்லத்துக் குழந்தைகளுக்கு உணவளிக்க ஒரு நாளுக்கு 200.00 டொலர்கள் மட்டுமே. ஒரு நாள் உணவளிக்க முடியாதோர் ஒரு வேளை உணவுக்கு 100.00 டொலர்கள் தாருங்கள். மேலதிக விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் பார்க்கலாம். ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி 14 ஆண்டுகளாகத் தொடர்கின்றது. தொடர்புகளுக்கு பரமேஸ் 416 841 9600

எமது வாழ்நாளில் ஒரு மலையைப் புரட்ட முடியவில்லையே என்ற கவலையை விடுவோம்! ஒரு குழந்தைகளுக்கு உணவளித்தோம் என்று மகிழ்வோடு வாழ்வோம். வாருங்கள்! இணையுங்கள்!

# கிழக்கில் இஸ்லாமிய அடிப்படை வாதக் குழு? மிகுந்த எச்சரிக்கையுடன் பாதுகாப்புத் தரப்பு!

கிழக்கின் கல்முனைப் பகுதியில் உருவாகியதாக சந்தேகிக்கப்படும் ஒரு தீவிரவாதக் குழு குறித்து புலனாய்வு அமைப்புகளும் பாதுகாப்புப் படையினரும் தற்போது விசாரணை நடத்தி வருவதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

வாராந்திர அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் பேசிய அவர் இந்தக் குழு தொடர்பான முதற்கட்ட தகவல்கள் கிடைத்துள்ளதாகவும். மேலும் விவரங்களை வெளிக்கொணர அதிகாரிகள் தீவிரமாக செயல்பட்டு வருவதாகவும் கூறினார்.

அந்தக் குழு அடையாளம் காணப்பட்டதா. தடை செய்யப்பட்டதா அல்லது கைது செய்யப்பட்டதா என்ற ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு அமைச்சர் இதன்போது பதிலளித்தார்.

இந்த நேரத்தில் கிழக்கு மாகாணத்தில் செயல்படும் அத்தகைய குழு பற்றிய தகவல்களை மட்டுமே நாங்கள் பெற்றுள்ளோம். புலனாய்வு மற்றும் பாதுகாப்பு நிறுவனங்கள் இந்த விடயத்தை சரி பார்த்து விசாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. அதிகாரிகளுடனான கலந்துரையாடல்களின் போது தேசிய பாதுகாப்பு தொடர்பான சில கவலைகளையும் ஜனாதிபதி எடுத்துரைத்தார். பாதுகாப்புப் படையினர் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றனர் என்பதை இப்போது நாங்கள் உறுதிப்படுத்த முடியும் என்று அமைச்சர் கூறினார்.



இந்த அடிப்படைவாத குழு குறித்து மேலதிக விபரங்களை பெறுவதற்கான முயற்சிகளில் பொலிஸாரும் இராணுவத்தினரும் ஈடுபட்டுள்ளனர் என தெரிவித்துள்ள அவர் ஜனாதிபதி இது குறித்து ஏற்கனவே நாடாளுமன்றத்தில் சில தகவல்களை தெரிவித்துள்ளர் என குறிப்பிட்டுள்ளார்.

இந்த அமைப்பின் செயற்பாடுகள் காணப்படுகின்ற போதிலும் பாதுகாப்பு தரப்பினர் மிகுந்த எச்சரிக்கை நிலையில் உள்ளனர் என அமைச்சரவை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு கல்முனை பகுதியிலேயே இந்த அமைப்பின் நடவடிக்கைகள் காணப்படுகின்றன இந்த பகுதியிலேயே அந்த அமைப்பு உருவாகியுள்ளது என அமைச்சரவை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# அமரன் திரைப்படத்திற்கு கிடைத்த சர்வதேச அங்கீகாரம்



ராஜ்குமார் பெரியசாமி இயக்கத்தில். சிவகார்த்திகேயன். சாய் பல்லவி ஆகியோரின் நடிப்பில் கடந்த ஆண்டு வெளியாகி ரசிகர்கள் மத்தியில் மாபெரும் வரவேற்பைப் பெற்ற திரைப்படம் '' அமரன்.

கமல்ஹாசனின் தயாரிப்பு நிறுவனமான 'ராஜ்கமல் பிலிம்ஸ் இத்திரைப்படத்தை தயாரித்திருந்த நிலையில் இசையமைப்பாளர் ஜி.வி பிரகாஷ் இதற்கு இசையமைத்திருந்தார்.

மேலும் இத்திரைப்படத்தில் முகுந்த் வரதராஜன் கதாபாத்திரத்தில் சிவகார்த்திகேயனும் அவரது மனைவி இந்து ரெபேக்கா வர்கீஸின் கதாபாத்திரத்தில் சாய்பல்லவியும் வெகு சிறப்பாக நடித்திருந்தனர்.

இந்திய இராணுவத்தில் பணியாற்றி வீரமரணம் அடைந்த மேஜர் முகுந்த் வரதராஜனின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இத் திரைப்படம் உலக அளவில் 350 கோடி இந்திய ரூபாவுக்கு மேல் வசூலித்திருந்ததோடு ஏராளமான விருதுகளையும் அள்ளிக் குவித்தது. இந்நிலையில் அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெறவுள்ள உலக கலாசார திரைப்பட விருதுக்கான விழாவில் திரையிடுவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட சிறந்த 10 படங்களில் அமரன் திரைப்படமும் இடம் பெற்றுள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

# இது ஓர் அபாய எச்சரிக்கையா?



ஞானசார தேரர் ஒரு காலத்தில் சர்ச்சைக்குரிய ஒருவர். அவரின் தலைமையில் இயங்கிய பொது பல சேனா இலங்கைத் தீவின் அரசியலில் திடீர் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய வல்லமையுடன் இருந்தது. 'நல்லாட்சி' காலத்தில் நீதிமன்ற அவதூறு வழக்கு ஒன்றில் கைதான அவர் குற்றம் நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து சிறையிலடைக்கப்பட்டார். தற்போது. விடுதலையாகியிருக்கும் அவர் உடனடியாகவே பேச முற்பட்டிருக்கிறார். அதிலும் குறிப்பாக முன்னர் எந்த விடயம் சர்ச்சைக்குரிய இன விவகாரமாக இருந்ததோ அதனையே கையிலெடுத்திருக்கிறார்.

அவர் திடீரென்று இவ்வாறு பேசுவதை தற்செயல் நிகழ்வு என்று கூறலாமா? ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் தாம் பல்வேறு தகவல்களை சுயாதீனமாக சேகரித்தார் என்றும் தாக்குதல் தொடர்பில் கர்தினால் மல்கம் ரஞ்சித்தை எச்சரித்தார் எனவும் ஆனால். அவர் அதனை பொருட்படுத்தவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார். புதிய அரசாங்கம் விசாரணைகளை முன்னெடுத்தால் அதற்கு உதவத் தயாராக இருக்கிறார் என்றும் தெரிவித்திருக்கின்றார்.

ஈஸ்டர் தாக்குதல் முஸ்லிம்கள் தொடர்பான இன விரோத அலையை எவ்வேளையிலும் பற்ற வைக்கும் ஆற்றலோடு தான் இப்போதும் காணப்படுகிறது. இந்த நிலையில் ஞானசாரதேரர் அந்த விவகாரத்தைத் திடீரென்று கையிலெடுத்திருப்பது ஓர் அபாய எச்சரிக்கையை முன்னுணர்த்துகிறதா என்னும் கேள்வியை எளிதில் புறந்தள்ளி விட முடியாது.

அதேவேளை. தேரர் இப்போது இன்னொரு புதிய விடயத்தையும் கையிலெடுத்திருக்கிறார். அதாவது அமெரிக்க உதவி நிறுவனம் திட்டமிட்டு பல அரசு சாரா நிறுவனங்களுக்கு நிதி வழங்கியதாகவும் அவ்வாறான திட்டங்கள் பௌத்த மக்களை பலவீனப்படுத்தும் நோக்கம் கொண்டவையாக இருந்தன என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

இது தொடர்பில் அரசாங்கம் உரிய விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிடுகிறார். அண்மையில். அமெரிக்க உதவி நிறுவனத்தின் வேலைத்திட்டங்களை அந்த நாட்டின் புதிய ஜனாதிபதி ட்ரம்பின் நிர்வாகம் 90 நாட்களுக்கு இடைநிறுத்தியிருக்கிறது. இதனால். உலகெங்கும் ஆயிரக்கணக்கான அரசுசாரா நிறுவனங்களும் அராசாங்கத் திட்டங்களும் முடங்கியிருக்கின்றன. உண்மையில். இது ஓர் உலகளாவிய விவகாரமாகும். அதாவது. அமெரிக்க உதவி நிறுவனத்தின் கீழ் நிதியளிக்கப்பட்ட பல திட்டங்கள் வினைத்திறன் மிக்கவையாக இருக்கவில்லை. எனவே. அமெரிக்க மக்களின் பணத்தை இவ்வாறு வீணாக்க முடியாது என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே ட்ரம்பின் நிர்வாகம் இந்த விடயத்தைக் கையிலெடுத்திருக்கிறது.

இலங்கையில் பல மில்லியன் டொலர்கள் ஊடக மேம்பாடு என்னும் பெயரில் செலவழிக்கப்பட்டதாக ட்ரம்ப் நிர்வாகத்தால் உருவாக்கப்பட்ட வினைத்திறன் மேம்பாடு தொடர்பான திணைக்களம் கேள்வி எழுப்பியிருந்தது. இதனை அடிப்படையாகக் கொண்டே. அண்மையில் ராஜபக்ஷ ஆதரவாளர்கள் சிலர் அமெரிக்க தூதரகத்துக்கு முன்னால் ஒன்றுகூடி. 'அமெரிக்க உதவி நிறுவனத்தால் செலவழிக்கப்பட்ட நிதி தொடர்பில் விசாரணைகள் வேண்டும்'. என்று கோரிக்கை முன் வைத்திருந்தனர். தற்போது அதே குற்றச்சாட்டையே ஞானசார தேரரும் முன்வைக்கிறார்.

விடயங்கள் ஒரு புள்ளியில் சந்திக்கின்றன. அமெரிக்கா தொடர்பில் இவ்வாறான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவது புதிய விடயமல்ல. இலங்கையில் இதற்கு முன்னரும் இவ்வாறான குற்றச்சாட்டுகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால். தற்போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் சூழலில் ராஜபக்ஷக்களின் சகாக்கள் முன்னைய சுலோகங்களோடு மீண்டும் முகம் காட்டுவதை தற்செயலென்று ஒதுக்கி விட முடியுமா என்பது தான் கேள்வியாகும்.

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக இயங்கிய 4 கட்சிகளும் தமிழினத்தின் நலன் கருதி மீண்டும் ஒன்றிணைய வேண்டுமென சிவஞானம் அழைப்பு!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கிய நான்கு கட்சிகளும் தமிழினத்தின் நலன் கருதி மீண்டும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், ஏனைய கட்சிகளின் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈபிஆர்எல்எப் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோருக்கு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் அனுப்பி வைத்த கடிதத்தில் இவ் விடயம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த கடிதத்தில், நடைபெற உள்ள உள்ளூராட்சி தேர்தல்கள் தொடர்பாக தங்கள் மூவருடனும் கலந்துரையாடியது இக்கலந்துரையாடல் ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக தங்களது கட்சிகளும் எமது கட்சியும் இணைந்து ஒன்றாகப் போட்டியிட்டது போல இந்தத் தேர்தலிலும் சில இடங்களிலாவது ஒன்றாக போட்டியிடுவது பற்றி ஆராய்வதற்கே ஆனது. இது சம்பந்தமாக கலந்துரையாட எதிர்வரும் 3ஆம் திகதியை செல்வம் அடைக்கலநாதன் உடன் நிர்ணயித்திருந்தோம்.

எனினும் அந்த முயற்சி இடம் பெற்றுக் கொண்டிருக்கும் போது தாங்கள் எமது கட்சி யைத் தவிர்த்து வேறு ஒரு கூட்டணியை கடந்த 23 ஆம் திகதி உருவாக்கியமை ஏமாற்றம் அளிப்பதாகவும் கவலை அளிப்பதாகவும் அமைந்தது. இது எமக்கு தனித்துப் போட்டியிடும் சூழலை உருவாக்கியமை இயல்பானதும் தவிர்க்க முடியாததமாகும்.

நாம் இந்த முயற்சியை மேற்கொண்டது தனிய தேர்தலுக்காக அல்ல. எமது முயற்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கிய இந்த நான்கு கட்சிகளும் தமிழினத்தின் நலன் கருதி மீண்டும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்ற நோக்கத்துடனே ஆகும் என்பதை மீண்டும் பதிவு செய்கிறேன். இந்த முயற்சியை மேலும் தொடரவே விரும்புகிறேன் இதற்கான தங்களது இணக்கம் இருக்குமானால் நாம் தொடர்ந்து பேசலாம்.

அதேநேரம் நாம் தனித்து போட்டியிட்டாலும் தேர்தலுக்குப் பின் இணைந்து வடக்கு - கிழக்கில் உள்ள சகல தமிழ் உள்ளூராட்சி மன்ற நிர்வாகங்களையும் நாம் கைப்பற்றும் முகமாக தேர்தலுக்குப் பின் செயற்படுவதற்கான உடன்பாடு ஒன்றை தேர்தலுக்கு முன்னரே ஏற்பாடு செய்தல். இதற்கும் தங்களது உடன்பாடு இருக்கும் என்றால் நாம் தொடர்ந்து பேசலாம். தங்களது துரித பதிலுக்கு காத்திருக்கின்றோம்.



# தமிழ்மக்கள் நலனுக்கான ஒன்றிணைவு அவசியமானால் நாமும் இணைந்து கொள்வோம் என டக்ளஸ் தேவானந்தா அறிவிப்பு!




தமிழ் கட்சிகள் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒன்றிணைந்து எதிர் கொள்வது தொடர்பில் பேசுவதற்கு உத்தியோபூர்வமாக எனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என தெரிவித்த ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மக்கள் நலனுக்காக ஒன்றிய அழைப்பு விடுத்தால் எனது பங்களிப்பு நிச்சயாமிருக்கும் என தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூர் ஆட்சி மன்ற தேர்தலில் தமிழ் மக்களுக்கான போராட்டங்களை தலைமை தாங்கிய இயக்கங்களின் ஒன்றிணைவு தொடர்பில் தமிழரசு கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்த கருத்து தொடர்பில் அவரிடம் கேட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நான் அன்றிலிருந்து இன்று வரை தமிழ் மக்களின் நலன் சார்ந்து எனது அரசியல் செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறேன் என்பது யாவரும் அறிந்த விடயம்.

தமிழ் மக்களின் அரசியல் அபிவிருத்தி மற்றும் அன்றாட பிரச்சனைகளுக்கு தீர்வு காணுவதே எனது அரசியல் அவா. துரதிஷ்டவசமாக பல சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் தமிழ் கட்சிகளின் ஒத்துழைப்பு உரிய நேரத்தில் கிடைக்காத காரணத்தினால் மக்களுக்கான தீர்வினை எட்ட முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

தற்போது உள்ளூராட்சி மன்ற தேர்தலை தமிழ் கட்சிகள் ஓரணியில் எதிர் கொள்வதா அல்லது தேர்தலின் பின்னர் ஓரணியில் செயல்படுவதா என்ற விவாதம் இடம்பெற்று வருகின்றன. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தமிழ் கட்சிகள் எதிர்கொள்வது தொடர்பில் என்னுடன் சிலர் பேசினார்கள் அது நட்பு நீதியாக இடம் பெற்ற தவிர உத்தியோபூர்வமாக பேசுவதற்கோ கலந்துரையாடுவதற்கோ எனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

உள்ளூர் ஆட்சி மன்ற தேர்தலை பொறுத்த வரையில் ஒற்றுமை என்கின்ற விடயம் தமிழ் மக்களின் நலன் சார்ந்து கட்சிகளுக்கிடையில் ஒற்றுமை அல்லது ஒன்றிணைவு இருக்க வேண்டும் என்பதே என்னுடைய நிலைப்பாடு.

கடந்த காலங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தொங்கு சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு ஈழ மக்கள் ஜனநாயக கட்சி ஆதரவை வழங்கியது. குறிப்பாக சொல்ல வேண்டுமானால் யாழ். மாநகர சபையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைப்பதற்கு ஆதரவு வழங்கி இமானுவேல் ஆனல்ட முதல்வர் ஆனார்.

அதேபோன்று யாழ் மாநகர சபையில் விஸ்வலிங்கம் மணிவண்ணுக்கு ஆதரவு வழங்கி அவரை முதல்வராக தெரிவு செய்வதற்கு உதவினோம். அது மட்டுமல்லாது, வேறு பிரதேச சபைகளிலும் மக்கள் நலன் சார்ந்த வரவு செலவுத் திட்டங்கள் முன் வைக்கப்படும் போது பாதீட்டை தோற்கடிக்காமல் வெற்றி பெறுவதற்கு எமது கட்சி பங்களிப்பை வழங்கியுள்ளது.

தற்போது எமது ஈழ மக்கள் ஜனநாயக கட்சி உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்பாளர்கள் தயார்படுத்தல்களில் ஈடுபட்டு வருகிறோம். ஆகவே தமிழ் மக்களின் நலனுக்காக செயற்படும் ஈழ மக்கள், ஜனநாயக கட்சி மக்கள் நலனுக்கான ஒன்றிணைவு அவசியம் என கருதும் பட்சத்தில் ஒன்றிணைந்து செயல்படுவதற்கு தயாராக இருக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஒரு தாயின் ஏமாற்று அடையாளமாக சாந்தன் துயிலாயம்

சாந்தன் துயிலாயம்` 28 பெப் 2025 தினம் வெள்ளிக்கிழமை சாந்தனின் தாயாரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. எள்ளங்குளம் துயிலுமில்லத்தில் சாந்தனின் புகழுடல் விதைக்கப்பட்ட இடத்தில், சாந்தனின் குடும்பத்தினரால் உருவாக்கப்பட்டுள்ள `சாந்தன் துயிலாயம்` தாயாரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது

அரசாங்கங்களாலும், அரசியலாலும், சட்டத்தாலும் கடவுள்களாலும் 33 ஆண்டுகள் ஏமாற்றப்பட்ட ஒரு தாயின் ஏமாற்று அடையாளமாக உருவாக்கப்பட்டுள்ளதாக குடும்பத்தினர் தெரிவித்தனர்



இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில், கைதாகி சுமார் 32 வருடங்களுக்கு மேலாக சிறைச் சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டு விடுதலையான சாந்தன், திருச்சி சிறப்பு முகாமில் குடிவரவு சட்டத்தின் கீழ் கடந்த 2023ஆம் ஆண்டு முதல் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கால பகுதியில் கடந்த 2024ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ஆம் திகதி காலமானார்.

அவரது விடுதலைக்காக அவரது குடும்பத்தினர் 33 வருடங்களாக போராடி வந்தனர். சிறையில் இருந்து விடுதலையான பின்னர் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வரை மீள இலங்கைக்கு அழைத்து வர குடும்பத்தினர் சுமார் ஒன்றரை வருட காலமாக போராடினார்கள்.

தமிழ் அரசியல்வாதிகள் பலரும் பார முகமாக செயற்பட்ட நிலையில் இலங்கை ஜனாதிபதி பிரதமர் முதல் இந்திய அரசியல் தலைவர்கள் முதல் சாந்தனின் விடுதலைக்காக அவரது குடும்பத்தினர் மன்றாடி வந்த நிலையில் எவரும் கண்டு கொள்ளாத நிலையில் அவரது உயிரற்ற உடலையே இலங்கை கொண்டு வந்து அவரது சொந்த ஊரில் விதைக்க முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



# ஸ்ரீலங்கா இராணுவக் கட்டமைப்பு மாற்றத்தையடுத்து இராணுவப் புலனாய்வுத்துறைக்குள் திடீர் அதிரடி மாற்றங்கள்!

சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத் துறையின் முக்கிய அதிகாரிகள் பலருக்கும் திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பொறுப்பேற்றவுடன் இராணுவக் கட்டமைப்பில் பாரிய மாற்றங் களை படிப்படியாக ஆரவாரமின்றி மேற் கொண்டு வருகின்றது. அதன் ஒரு கட்டமாக அண்மைக் காலமாக புலனாய்வுத்துறையிலும் பாரிய இடமாற்றங்கள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில் இராணுவப் புலனாய்வுத்துறையின் பணிப்பா ளராக இருந்த பிரிகேடியர் புத்திக மஹதன்தில, பதவியில் இருந்து அகற்றப்பட்டு எதுவித பொறுப்பு களும் வழங்கப்படாமல் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளார். அதனையடு த்து பிரிகேடியர் பிரபோத சிறி வர்த்தன, புலனாய்வுத்துறையில் இருந்து இராணுவ பான்ட் வாத் திய இசைக்குழுவின் பணிப்பாளர் பதவிக்கு மாற்றப்பட்டுள்ளார். இவர் புலனாய்வு செயற்பாடு தொடர்பில் விசேட பயிற்சிகள் பெற்றுள்ள இராணுவ அதிகாரியா




வார்.

புலனாய்வுத்துறையில் இருந்த இன்னொரு பிரிகேடியர் ஷிரான் அமித், தற்போதைக்கு புனர்வாழ்வு செயற்பாட்டுக்குப் பொறுப்பான வராக நியமிக்கப்பட்டுள்ளார். மற்றொரு பிரிகேடியர் பிரியலால், அனர்த்த முகாமைத்துவ நடவடி க்கைகள் பணிப்பாளராக இட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். பிரிகேடியர் குமார புலனாய்வுப் பிரிவில் இருந்து ஒதுக்கப்பட்டு, இராணுவ தலைமையக செயற் திட்ட பிரிவில் வெறுமனே உட் கார வைக்கப்பட்டுள்ளார். பிரிகேடி யர் நுவன் அபேசேகர, இசுருபாய செயற்திட்ட அதிகாரியாக மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அதனையடுத்து புலனாய்வுத் துறையில் சிரேஷ்ட கேணல் தரத்தில் இருந்த அதிகாரிகளான சேனக முதுகுமாரண கொத்தலா வலை பயிற்சிக் கல்லூரிக்கும், கெளும் மத்துமகே பொறுப்புகள் இன்றியும், கேணல் முஹம்மத் அன்சார் புத்தளைக்கும், கேணல் புளத்வத்த முல்லைத்தீவுக்கும், கேணல் சாகர கொஸ்தா கிளி நொச்சிக்கும், கேணல் ஜயந்த ஷெல்டன் ஹம்பாந்தோட்டை க்கும், கேணல் முஹம்மத் இக்ராம் இராணுவ ஆய்வுப் பிரிவுக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நடவடிக்கைகள் காரணமாக இராணுவப் புலனாய் வுத்துறையின் செயற்பாடுகளில் பாரிய தடங்கல்கள் ஏற்பட்டுள்ள தாக முன்னைய ஆட்சியாளர் களும் புலம் பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர்களது ஊடகங்களும் செய்திகளை வெளியிட்டுள்ளன.

# ட்ரம்பின் வர்த்தக வரிகளுக்கு கனடா - சீனா -மெக்சிகோ பதிலடி!



மெக்சிகோ மற்றும் கனடாவிலிரு ந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் புதிய 25வீத வரிகள் 04 மார்ச் 2025 செவ்வாய்க்கிழமை முதல் அமலு க்கு வந்தன.

அத்தோடு சீனப் பொருட்களுக் கான வரிகளை 20வீதமாக இரட்டிப்பாக்கி அமெரிக்காவின் முதல் மூன்று வர்த்தக பங்காளி களுடன் புதிய வர்த்தக மோதல்கள் ஆரம்பமாகியுள்ளன.

அமெரிக்க வருடாந்திர இரு வழி வர்த்தகத்தில் கிட்டத்தட்ட $2.2 டிரில்லியன் உயர்த்தக் கூடிய இந்த வரி நடவடிக்கைகள் செவ் வாய்க்கிழமை அதிகாலை 12:01 மணிக்குநடைமுறைக்கு வந்தது.

இந்த வரி விதிப்புக்கு பின்னர், அமெரிக்காவிற்கு எதிராக பதிலடி நடவடிக்கைகளை சீனா, கனடா மற்றும் மெக்சிகோ அறிவித்துள் ளன.

மார்ச் 10 முதல் சில அமெரிக்க இறக்குமதிகள் மீது 10வீதம் – 15வீதம் கூடுதல் வரிகளை சீனா விதித்தது மற்றும் நியமிக்கப்பட்ட அமெரிக்க நிறுவனங்களுக்கு தொடர்ச்சியான புதிய ஏற்றுமதி கட்டுப்பாடுகளை அறிவித்தது. மூன்று தசாப்தங்களாக அமெரிக்கா வுடன் கிட்டத்தட்ட வரி இல்லாத வர்த்தக உறவை அனுபவித்து வரும் கனடாவும் மெக்சிகோவும், தங்கள் நீண்டகால கூட்டாளிக்கு எதிராக உடனடியாக பதிலடி கொடுக்கத் தயாராக இருந்தன.

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஒட்டாவா, அமெரிக்க இறக்குமதி பொருட்களுக்கு உடனடியாக 25வீதம் வரிகளை விதிக்கும் என்றும், ட்ரம்பின் வரிகள் 21 நாட்களுக்குள் அமுலில் இருந் தால், மேலும் 125 பில்லியன் கனேடியன் டொலர் ($86.2 பில்லி யன் டொலர்) வரிகளை விதிக்கும் என்றும் கூறினார்.

முன்னதாக கனடா, அமெரிக்க பீர், ஒயின், போர்பன், வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் புளோரிடா ஆரஞ்சு பழச்சாறு ஆகியவற்றை குறி வைக்கும் என்று அவர் கூறி னார்.



அதேநேரம், கட்டணங்கள் நம்ப முடியாத அளவிற்கு வெற்றிகர மான வர்த்தக உறவை சீர்குலை க்கும். அவை டிரம்ப் தனது முதல் பதவிக்காலத்தில் கையெழு த்திட்ட அமெரிக்க–மெக்சிகோ– கனடா சுதந்திர வர்த்தக ஒப்பந்த த்தை மீறும் என்றும் ட்ரூடோ குறிப்பிட்டார்.

# அமெரிக்காவில் ஆட்சி மொழியாக ஆங்கிலம் அறிவிப்பு!

ஆங்கிலத்தை அமெரிக்காவின் அதிகாரப்பூர்வ ஆட்சி மொழியாக நிர்ணயித்து அந்நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அரசாணை யில் கையெழுத்திட்டுள்ளார்.

ஆங்கில மொழியை முதல் மொழி யாகப் பேசுவோரில் 3-ல் 2 பங்கைச் சேர்ந்தவர்கள் அமெரிக் காவில் வசித்து வருகின்றனர். அமெரிக்காவில் பரவலாகப் பேசப்படும் ஆங்கில மொழி அமெ ரிக்க ஆங்கிலம் என்று கூறப்படு கிறது. ஆரம்பத்தில் இங்கிலாந்தி லும் அமெரிக்க குடியேற்றப் பகுதி களிலும் ஒரே மாதிரியான ஆங்கி லம் பேசப்பட்ட போதிலும் காலப் போக்கில் ஆங்கில ஒலிப்பு முறை மற்றும் எழுத்தில் மாற்றம் ஏற்பட் டது.

இந்நிலையில் அமெரிக்காவின் அதிகாரப்பூர்வ ஆட்சி மொழியாக ஆங்கிலத்தை மாற்றும் நிர்வாக உத்தரவில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையெழு த்திட்டுள்ளார்.

அமெரிக்காவில் 350க்கும் மேற் பட்ட மொழிகள் பேசப்படுகின்ற போதிலும் வெள்ளை மாளிகை ஆவணங்களில் எப்போதும் ஆங்கில மொழி மாத்திரமே பயன் படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஜெனிவாவை நம்புதல்

பொதுவாக மார்ச் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் ஜெனிவா என்னும் சொல் ஈழத் தமிழர் அரசியலில் முகம் காண்பிப்பதுண்டு. ஜெனிவாவை ஓர் இராஜ தந்திர மேடையாகப் பயன்படுத்துவதாகவே கடந்த பதினைந்து வருடங்களாக தமிழ் கட்சிகளும் சிவில் சமூக அமைப்புகளாகத் தங்களை அடை யாளப்படுத்துபவர்களும் கூறி வந்திருக்கின்றனர்.

வெளிநாட்டு கொடை நிறுவனங்களின் நிதியில் மனித உரிமைகள், நிலைமாறுகால நீதி என்னும் பெயரில் இலவச சுற்றுலா சென்றவர்களும் அதிகம். ஆனால், கடந்த பதினைந்து வருடங்களில் ஜெனிவா என்னும் மேடையைப் பயன்படுத்தியதால் ஏற்பட்ட நன்மைகள் என்று குறிப்பிட்டுச் சொல் வதற்கு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஜெனிவாவில் பிரேரணைகள் முன் வைக்கப்படுவ தும் அது தொடர்பில் வாதப் பிரதிவாதங்கள் இடம் பெறுவதும் ஆனால், அரசாங்கமோ வழமை போல் வெளிநாட்டு தலையீடுகளை அனுமதிக்க முடியாது என்று கூறுவதாகவுமே இந்த நிலைமை தொடர்கிறது. அரசாங்கம், ஜெனிவாவை இலகு வில் கையாளக்கூடிய ஒரு மேடையாகவே கருது கிறது. அரசாங்கம் அவ்வாறு கருதுவதற்கு ஏற்ற வாறு தான் சர்வதேச அரசியல் சூழலும் இருக் கிறது.

2012இல் அப்போதைய ஜனாதிபதி ஒபாமா தலை மையிலான அமெரிக்க நிர்வாகமே இலங்கையின் பொறுப்புக்கூறலை ஜெனிவா மயப்படுத்தியது. அப்போது அமெரிக்க இராஜாங்கச் செயலாக இரு ந்த ஹிலாரி கிளின்ரன் இலங்கை மீதான பொறு ப்புக்கூறல் பிரேரணையில் பிரத்தியேக ஈடுபாட் டைக் காண்பித்திருந்தார். இதற்கு ஒரு காரணம் இருந்தது. மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை அகற்றுவதில் அப்போதைய அமெ ரிக்க நிர்வாகம் ஆர்வம் காண்பித்திருந்தது. ராஜ பக்ஷவின் சீன சார்பே இதற்கான அடிப்படையான காரணம்.

ஒருவேளை, ராஜபக்ஷக்கள் சீன சார்புக்குள் விழாது போயிருந்தால் அமெரிக்காவின் அணுகு முறையும் வேறு விதமாக இருந்திருக்கலாம். இவ் வாறானதொரு பின்னணியில்தான் 2015இல் ஆட்சி மாற்ற மொன்று ஏற்பட்டது. அந்த ஆட்சி மாற்றத் துக்கு ஒரு நிரந்தரமான அடித்தளத்தை ஏற்படுத் திக் கொடுப்பதில் அமெரிக்கா ஆர்வம் காண்பித் தது.

அமெரிக்காவின் ஆசிய மையக் கொள்கையின் ஓர் அங்கமாகவே அது இடம் பெற்றிருந்தது. ஹிலாரி யின் பார்வையில், அமெரிக்காவின் தலைமைத் துவத்துக்காக ஆசியா ஏங்கிக் கொண்டிருந்தது. அமெரிக்காவின் முன்னணி சிந்தனைக்கூடமான ஈஸ்ட் வெஸ்ட் நிலையத்தில் 'அமெரிக்காவின் பசுபிக் நூற்றாண்டு' என்னும் தலைப்பில் உரை யாற்றிய போதே அவர் மேற்படி கருத்தை வலி யுறுத்தியிருந்தார்.

இவ்வாறானதொரு பின் புலத்தில்தான் இலங்கை யின் மனித உரிமைகள் விடயத்தை ஜெனிவா மயப்படுத்தும் விடயத்துக்கு அமெரிக்கா தலைமை தாங்கியது. ஒபாமாவின் இரண்டாவது ஆட்சிக் காலத்தில், இராஜாங்கச் செயலராக இருந்த ஜோன் ஹெரி கொழும்புக்கு விஜயம் செய்திருந்தார்.

மேற்குலகு சார்பான ரணில் மைத்திரி அரசாங்கம் அமெரிக்காவால் முன்கொண்டு வரப்பட்ட பொறு ப்புக்கூறல் விடயத்துக்கு ஆதரவான நிலைப்பாட் டைக் கைக்கொண்டதில் ஆச்சரியம் எதுவு மில்லை. ஆனால், அரசாங்கம் குறிப்பிட்டவாறு விடயங்களில் முன்னேற்றம் ஏற்படவில்லை.

அதேவேளை மேற்குலகு சார்பான ஆட்சியையும் தொடர முடியவில்லை. ஆட்சி மாற்றத்தின் மீதான அமெரிக்க அணுகுமுறை தோல்வியடைந்தது என்றே கூறலாம்.

இன்றைய நிலைமையோ இன்னும் சிக்கலடை ந்திருக்கிறது. தமிழ் மக்களின் ஆதரவையும் பெற்றிருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மீண்டும் உள்நாட்டு பொறிமுறையையே ஜெனிவா வில் வலியுறுத்தியிருக்கிறது. உலக அரசியல் நிலைமைகளில் இலங்கையின் மனித உரிமைகள் மீது அதிக ஆர்வம் காண்பிப்பதற்கு இப்போது எவரும் இல்லை. உதட்டளவு அழுத்தமாகவே

ஜெனிவாவின் கருத்துகள் இருக்கப்போகின்றன. ஒரு வகையில் ஜெனிவா மேடைதான் 'மெல்லு வதற்கு அவல் கிடைத்த கதைபோல்...' இலங்கை விடயம் உச்சரிக்கப்படும். ஆனால், அதனை பயன்படுத்தி ஈழத் தமிழர் அரசியலை முன்னகர்த்த முடியாது. ஈழத் தமிழர் தங்களுக்கான மேடை எங்குள்ளது என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க அரசு தயார்!



சட்டபூர்வமான அரசின் கீழால் செயற்படும் குற்றவியல் அரசை,தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முடிவுக்குக் கொண்டு வரும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

வரலாற்றில் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இனவாதம் மற்றும் அடிப்படைவாதம் அமைந்திருந்தது என்றும் இலங்கையில் மீண்டும் இனவாதம் மற்றும் அடிப்படைவாதம் தலைதூக்க தற்போதைய அரசாங்கம் அனுமதிக்காது என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

புதிய சட்டக் கட்டமைப்பின் மூலம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பாராளுமன்றத்தில் கடந்த 28 பெப் 2025 வெள்ளிக்கிழமை நடைபெற்ற 2025 வரவுசெலவுத் திட்டத்தின் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சின் செலவினங்கள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடி மற்றும் நாட்டில் பாதுகாப்பு இல்லை என்ற எண்ணத்தை உருவாக்குவதன் மூலமோ பொதுமக்கள் கிளர்ச்சியை உருவாக்குவதன் மூலமோ, அரசாங்கத்தை கவிழ்க்க எதிர்க்கட்சிகள் காணும் கனவுக்கு ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

தற்போதைய அரசாங்கம் காட்டுமிராண்டித்தனத்தின் சகாப்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, நாகரிகத்திற்கு வழி வகுத்துள்ளது என்றும், முடிந்தால் தற்போதைய அரசாங்கத்தின் நாகரிகத்தை மிஞ்சிச் செல்லுமாறும் எதிர்க்கட்சிகளுக்கு ஜனாதிபதி சவால் விடுத்தார்.

அவ்வாறு இல்லாமல் பழைய அரசியலிலே இருந்தால் அரசியலை விட்டு விலகுவதை தடுக்க முடியாதெனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார். பாதாள உலகின் குற்ற குழுக்களுக்கு தற்போதைய அரசாங்கத்தின் எந்தவொரு உறுப்பினரினதும் ஆசிர்வாதம் கிடைக்காதெனவும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

இலங்கை இராணுவத்தையும் பொலிஸையும் தொழில்சார்புடைய இராணுவமாகவும் பொலிஸாகவும் மாற்றுவதாக உறுதியளித்த ஜனாதிபதி, பாதுகாப்பு துறையின் எந்தவொரு இடமாற்றத்தையும் நட்பு மற்றும் அரசியல் அடிப்படையில் செய்யப் போவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

முன்னாள் பாதுகாப்பு படைகளின் பிரதானிக்கு ஏழு தடவைகள் சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருப்பதாகவும், சகாக்களுக்கும் நண்பர்களுக்கும் நியமனங்களை வழங்குவதால் புதிய பயணத்தை செல்ல முடியாது என்பதால் புதியவர்களுக்கு நியமனங்கள் வழங்கியிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நபரொருவருக்கு பக்கச் சார்பான இராணுவத்திற்கு பதிலாக நாட்டுக்கு சார்பான இராணுவம் ஒன்றை உருவாக்கவும் தொழில்சார்பு தன்மையை மேம்படுத்தவும் தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

காலத்தால் மறைந்திருக்கும் குற்றச் செயல்களுக்கு நீதி மற்றும் நியாயத்தை வழங்க தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் எனவும், அதற்காக எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் தற்போதைய அரசாங்கம் எடுக்குமெனவும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

பாதுகாப்பு துறையின் கட்மைப்பின் மீதான நம்பிகையின் அடிப்படையிலேயே ஒழுக்கம் கட்டியெழுப்பப்படும் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, ஒழுக்கயீனத்தின் பாதாளம் வரையில் சென்றுள்ள இந்த நாட்டை மீண்டும் ஒழுக்கத்தை நோக்கி கொண்டுச் செல்ல தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி அதிகாரத்தை பெற்றுக் கொள்ளும் எதிர்க்கட்சியின் கனவு தற்போது முற்றுப்பெற்றுள்ளதென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தேசிய பாதுகாப்பு தொடர்பில் நெருக்கடியிருப்பதாக காண்பித்து ஆட்சி அதிகாரத்தை பெற்றுக்கொள்ளும் முயற்சியில் எதிர்கட்சி தற்போது இருக்கின்றதா என்ற சந்தேகம் எழுவதாகவும் கூறினார்.

இம்மாதத்தில் நடந்த ஐந்து குற்றச் செயல்களை விசாரணை செய்யும்போது ஐந்து குழுக்களினால் அந்த குற்றச் செயல்கள் செய்யப்பட்டுள்ளதெனவும், விசாரணைகள் முன்னெடுக்கப்படும் போது தமது பக்கம் விசாரணைகள் வருவதை குற்றச் செயல்களை செய்வோர் அறிந்து கொள்வதாகவும், அவ்வாறு பல குற்றக் குழுக்கள் ஒரே சமயத்தில் இயங்குவது சூழ்ச்சியாக இருக்குமா என்ற சந்தேகம் எழுவதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இந்த சூழ்ச்சியை அறிந்துகொண்டு அதனை முடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

அதேபோல் சூழ்ச்சிகளால் ஆட்சி மாற்றம் செய்த காலம் முடிந்து விட்டதாகவும், ஒழுக்கத்தினால் அரசாங்கமொன்றை கட்டியெழுப்ப முடியுமெனவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சுட்டிக்காட்டினார். அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரசியல் அதிகார தரப்பை குற்ற குழுக்கள் அற்றதாக்கும் சமூகத்தை கட்டியெழுப்புவதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். பாதுகாப்பு துறையினரின் வெளிநாட்டு பயிற்சிகளுக்கான (22ம் பக்கம் பார்க்க)



# மாற்றமின்மையே மாறாதது?

ஒரு புறம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நோக்கி புதிய ஒருங்கிணைப்புக்களுக்காக உழைக்கும் கட்சிகள், சுயேட்சைகள். இன்னொருபுறம் ஐநாவின் 58 ஆவது மனித உரிமைகள் கூட்டத் தொடர் ஆரம்பமாகியிருக்கிறது.

கடந்த 15 ஆண்டுகளிலும் ஐநாவின் மீதான கவனக்குவிப்பு படிப்படியாகக் குறைந்து கொண்டு வருகிறது. ஐநாவை நோக்கிச் செல்லும் தமிழ் அரசியல்வாதிகளின் தொகையும் குறைந்து கொண்டு வருகிறது.

இம்முறை ஐநா கூட்டத் தொடருக்கு இரண்டு முக்கிய புதிய பரிமாணங்கள் உண்டு. முதலாவது பரிமாணம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது தனக்குத் தமிழ் மக்களின் ஆணையும் இருப்பதாகக் கூறிக் கொள்கிறது. தமிழ்த் தேசியக் கட்சிகள் மட்டும் இப்பொழுது தமிழ்த் தரப்பு அல்ல என்றும் கூறத் தொடங்கி விட்டது. அவ்வாறு தமிழ் மக்களின் ஆணையைப் பெற்றிருக்கும் ஓர் அரசாங்கம், தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பில், இன நல்லிணக்கம் தொடர்பில் தமிழ் மக்களோடு இணைந்து செயற்படுவதற்கான அதிகரித்த வாய்ப்புகளைக் கொண்டிருக்கிறது என்று வெளி உலகத்திற்கு காட்ட முற்படுகின்றது. இது உள்நாட்டு நிலவரம்.

மற்றது பிராந்திய மற்றும் உலகளாவிய நிலவரம். இலங்கையில் இடதுசாரிப் பாரம்பரியத்தில் வந்த ஆனால் நடைமுறையில் வலது பக்கம் சாய்கின்ற ஓர் அரசாங்கம் ஆட்சிக்கு வந்திருக்கிறது. சீனா இந்த அரசாங்கத்தை இலகுவாகக் கையாளப்படத்தக்க ஒன்றாகக் கருதுகிறது. அது இப்பிராந்தியத்தில் இந்திய-சீன அமெரிக்க சீன நலன்கள் தொடர்பான ஒரு புதிய போட்டிக் களத்தைத் திறக்கப் போகின்றதா?



மேலும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையிலிருந்து அமெரிக்கா வெளியேறுகின்றது. அதேசமயம், புதிய அமெரிக்க அதிபராகிய ட்ரம்பின் வழமைக்கு மாறான அணுகுமுறையும் அனைத்துலக அரசியலில் புதிய தெரிவுகளையும் புதிய ரத்தச் சுற்றோட்டங்களையும் உருவாக்கக்கூடியது.

இப்படிப்பட்டதோர் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சூழலில் ஐநாவின் ஐம்பத்தி எட்டாவது கூட்டத் தொடர் தொடங்கியிருக்கிறது.

ஆனால் மேற்சொன்ன அத்தனை புதிய நிலைமைகளும் இருக்கத் தக்கதாக அல்லது, புதிய திருப்பங்கள் தொடர்பான எதிர்பார்ப்புகள் இருக்கத்தக்கதாக, இலங்கையில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பிரதிநிதியாக ஐநாவுக்குச் சென்ற அமைச்சர் விஜித ஹேரத் அங்கே ஆற்றிய உரைகளைத் தொகுத்துப் பார்த்தால் என்ன தெரிகிறது? எதுவுமே மாறவில்லை.

முன்னைய அரசாங்கங்கள் கடைப்பிடித்த அதே விதமான அணுகுமுறைகளைத் தான் தேசிய மக்கள் சக்தியும் கையாளப் போகிறது என்று கருதத்தக்க விதமாக அமைச்சர் விஜித ஹேரத்தின் உரை காணப்படுகின்றது.

அமைச்சர் தனது உரையில் அனைத்துலக விசாரணைப் பொறிமுறையை நிராகரித்து உள்நாட்டுப் பொறி முறைகளை வலியுறுத்திப் பேசியிருக்கிறார்.




கடந்த சில ஆண்டுகளாக ஐநா மனித உரிமைகள் அலுவலகத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இலங்கையைப் பொறுப்பு கூற வைப்பதற்கான நிகழ்ச்சி திட்டத்துக்கு ஆதரவாக அவர் எதையும் கூறவில்லை. அந்த நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக இயங்கிக் கொண்டிருக்கும் சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான பொறிமுறைக்கு ஆதரவாக அவர் எதையும் தெரிவித்திருக்கவில்லை.

இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்று தான். மற்றொரு அமைச்சரான லால் காந்த அண்மையில் கூறியிருப்பது போல அரசாங்கம் தான் மாறியிருக்கிறது. அரசு மாறவில்லை என்பது உண்மை தான். சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பு அப்படியே இருக்கின்றது. அக் கட்டமைப்பின் ஒரு பகுதியான அரசாங்கம் தேர்தல் மூலம் மாற்றப்பட்டிருக்கிறது. மாறாக சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பை நிர்மாணிக்கும் ஏனைய அடிப்படை மூலக்கூறுகளான மகா சங்கம், படைக் கட்டமைப்பு, நீதி பரிபாலனக் கட்டமைப்பு ஆகிய ஏனைய மூன்று கட்டமைப்புகளிலும் எந்த மாற்றமும் நிகழவில்லை.

அதாவது சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பை நிர்மாணிக்கும் நான்கு அடிப்படை மூலக்கூறுகளில் ஒன்று மட்டும் மாறியிருக்கிறது. அந்த மாற்றமும் கூட தமிழ் நோக்கு நிலையில் மாற்றம் அல்ல. எனவே இந்த அரசாங்கம் அரசுக் கொள்கையில், அரசுக் கட்டமைப்பில் எப்படிப்பட்ட மாற்றங்களை ஏற்படுத்தலாம்? அல்லது அதை மேலும் ஆழமான பொருளில் கேட்டால், அவ்வாறு மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய கொள்ளளவு புதிய அரசாங்கத்துக்கு உண்டா? அல்லது சிங்கள பவுத்த அரசுக் கட்டமைப்பு அவ்வாறான மாற்றங்களை அனுமதிக்குமா ?

இல்லை. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வர முன்னரே ஐநா தொடர்பான அதன் அணுகு முறைகளை ஓரளவுக்குத் தெளிவாக உணரக் கூடியதாக இருந்தது. அனுர ஜனாதிபதி வேட்பாளராக இருந்த காலகட்டத்தில் அசோசியேற்றற் பிரஸ் ஊடகத்துக்கு வழங்கிய ஒரு நேர்காணலில் அதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருந்தார். பாதிக்கப்பட்ட மக்கள் குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்று கேட்கவில்லை. உண்மையை வெளியே கொண்டு வர வேண்டும் என்று தான் கேட்கிறார்கள் என்று. இங்கு உண்மை என்பது என்ன? யார் குற்றம் இழைத்தார்கள் என்று கண்டு பிடிப்பது. குற்றவாளிகளை ஏன் கண்டு பிடிக்க வேண்டும்? அவர்கள் இழைத்த குற்றங்களுக்காக அவர்களை தண்டிப்பதற்கா? அல்லது மன்னிப்பதற்கா? அக்குற்றங்கள் மீண்டும் நிகழ்வதை தடுப்பதற்கு அதாவது மீள நிகழாமைக்கு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமா? மன்னிக்கப்பட வேண்டுமா? தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இனப்பிரச்சினை தொடர்பில் குற்றங்களைத் தண்டிக்கும் துணிச்சலான முடிவுகளை எடுக்கத் தேவையான பொலிடிக்கல் வில்லை அரசியல் திடசித்தத்தைக் கொண்டிருக்கின்றதா? இல்லை.

அல்லது குறைந்த பட்சம் கடந்த சுமார் 70 ஆண்டுகளுக்கு மேலாக ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்காக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மன்னிப்புக் கேட்குமா? அதிலாவது ஒரு குறைந்தபட்ச மாற்றத்தைக் காட்டுமா?

இல்லை. அவர்கள் காட்ட மாட்டார்கள். சரியோ பிழையோ ரணில் விக்கிரமசிங்க யாழ் நூலகம் எரிக்கப்பட்டதற்கு மன்னிப்பு கேட்டிருந்தார். அதில் தந்திரங்கள் இருக்கலாம். ஆனால் ரணில் மன்னிப்புக் கேட்டார் என்பது ஒரு சரியான முன்னுதாரணம்.

அதே சமயம், தமிழ் மக்களுக்கு சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பு இழைத்த எல்லாக் குற்றங்களுக்கும் அவர் மன்னிப்புக் கேட்கவில்லை. ஏனென்றால் அவ்வாறு மன்னிப்புக் கேட்டால் குற்றங்கள் நடந்திருப்பதை அவர் ஏற்றுக் கொண்டதாகி விடும். அதற்கு ரணில் தயாராக இருக்கவில்லை. இப்பொழுது தேசிய மக்கள் சக்தியும் தயாராக இல்லை. லால் காந்த கூறியது போல அரசாங்கம் தான் மாறியிருக்கிறது.

இனப்பிரச்சினை தொடர்பான சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பின் நிலைப்பாடுகளில் திருப்பகரமான மாற்றங்கள் எவையும் ஏற்படவில்லை. தமிழ் கட்சிகளின் செயலின்மையால் ஐக்கியமின்மையால் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தார்கள். அது சிங்கள பொது அரசு கட்டமைப்பில் மாற்றம் ஏற்படும் என்று நம்பிக் கொடுத்த வாக்குகள் அல்ல.

அரகலிய போராட்டங்கள் ஒப்பீட்டளவில் சிங்கள மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தின. ஆனால் வரலாற்று விழிப்புணர்வை ஏற்படுத்தவில்லை. என்று ஒரு முன்னாள் ஜேவிபி முக்கியஸ்தர் கூறியிருக்கிறார். அது மிகச் சரி. அரசியலறிவு வளர்ந்திருக்கலாம். ஆனால் வரலாற்று அறிவு அல்லது வரலாற்று உணர்வு வளரும் போது தான் இறந்த காலத்தைக் குறித்த குற்ற உணர்ச்சி ஏற்படும். அப்பொழுது தான் மன்னிப்புக் கேட்கலாம். மன்னிப்பு கேட்டால் தான் அடுத்த கட்டமாக குற்றங்களுக்குப் பரிகாரம் காணலாம். குற்றங்கள் மீண்டும் நடப்பதைத் தடுக்கலாம். ஐநாவின் வார்த்தைகளில் சொன்னால் அதாவது நிலைமாறு கால நீதியின் சொற்றொடர்களில் சொன்னால் மீள நிகழாமை- Non recurrence.

இப்பொழுது மீண்டும் ஐநா கூட்டத் தொடருக்கு வருவோம். அமைச்சர் விஜித ஹேரத் ஐநாவில் ஆற்றிய உரையின்படி அவர்கள் 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பொறுப்புக் கூறலுக்கான ஐநா தீர்மானத்தின் (30-1) அடிப்படையில் சில கட்டமைப்புகளை ஏற்றுக் கொள்வதாகத் தெரிகிறது. அல்லது சில கட்டமைப்புகளோடு அனுசரித்துப் போக முற்படுவதாகத் தெரிகிறது.

ஆனால் அக்கட்டமைப்புகள் யாவும் எவை என்று பார்த்தால், உள்ளூரில் இயங்குபவை. அனைத்துலகப் பரிமாணம் குறைந்தவை. அதை விட முக்கியமாக பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்புகளால் நிராகரிக்கப்பட்டவை.

அதாவது அமைச்சர் விஜித ஹேரத்தின் வார்த்தைகளிலேயே சொன்னால், அரசாங்கம் அனைத்துலக விசாரணைப் பொறிமுறை எதற்கும் தயாரில்லை. உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை ஒன்றைத் தான் கேட்கின்றது. அதைத் தானே மகிந்தவும் கேட்டார்? அதைத் தானே ரணிலும் கேட்டார்? இந்த இடத்தில் தேசிய மக்கள் சக்தி என்ன மாற்றத்தைக் காட்டியிருக்கிறது?

புத்த பகவான் மாற்றம் ஒன்றே மாறாதது என்று சொன்னார். ஆனால் இலங்கைத் தீவின் சிங்கள பௌத்த அரசியலில் தமிழ் மக்களைப் பொறுத்தவரை மாற்றமின்மை தான் மாறாத ஒன்றா?



# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.


"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

22 பெப்ரவரி 2025 – 07 மார்ச் 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**


## 14வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி முருகேசு பரிமளம்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி முருகேசு பரிமளம் அவர்களின் 14வது ஆண்டு நினைவு நாள் 07 மார்ச் 2025 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி முருகேசு பரிமளம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 13வது ஆண்டு நினைவஞ்சலி



### Dr இரத்தினவடிவேல் மயில்வாகனம்

மலர்வு:- 02.04.1927 உதிர்வு:-22.02.2012

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டு சிவபதம் அடைந்த அமரர் டாக்டர் இரத்தினவடிவேல் மயில்வாகனம் அவர்களின் 13வது ஆண்டு நினைவு நாள் 01 மார்ச் 2025 சனிக்கிழமையாகும் அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் இரத்தினவடிவேல் மயில்வாகனம் அவர்களை நினைவு கூர்ந்து சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 13வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பரமேஸ்வரி தனபாலசிங்கம்

நாவலர்மடம் நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி அவர்களது 13வது ஆண்டு நினைவு நாள் 24 பெப்ரவரி 2025 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 37வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நாகலிங்கம் சண்முகலிங்கம்

புங்குடுதீவைச் சேர்ந்த சங்கீதபூஷணம், இசை ஆசிரியர் திரு நாகலிங்கம் சண்முகலிங்கம் அவர்களது 37வது ஆண்டு நினைவு நாள் 17 பெப்ரவரி 2025 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் 23 பெப்ரவரி 2025 ஞாயிற்றுக்கிழமை அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் நாகலிங்கம் சண்முகலிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி புவனேஸ்வரி நடராஜா

தையிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி புவனேஸ்வரி நடராஜா அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 08 மார்ச் 2025 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி புவனேஸ்வரி நடராஜா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு விஸ்வலிங்கம் சுப்பிரமணியம்

மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு விஸ்வலிங்கம் சுப்பிரமணியம் அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 08 மார்ச் 2025 சனிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு விஸ்வலிங்கம் சுப்பிரமணியம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 26வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி மார்க்கண்டு மனோன்மணி
### திரு செல்லர் மார்க்கண்டு

யாழ்ப்பாணம் சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி மார்க்கண்டு மனோன்மணி அவர்களது 26வது ஆண்டு நினைவு நாள் 10 மார்ச் 2025 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் தந்தையார் திரு செல்லர் மார்க்கண்டு அவர்களது நினைவையும் இணைத்து அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். தாய், தந்தையரை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



16 பெப்ரவரி 2025 ஞாயிற்றுக்கிழமை சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருஷ்ணவேணி ஸ்ரீதரன் அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



18 பெப்ரவரி 2025 செவ்வாய்க்கிழமை அன்புவெளிபுரம் திருகோணமலையைச் சேர்ந்த திருமதி சீனித்தம்பி செல்வம் அவர்களது 16வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



20 பெப்ரவரி 2025 வியாழக்கிழமை வீரபத்திரர் கோவிலடி உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நோர்த்யோர்க் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம் அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



22 பெப்ரவரி 2025 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நந்தகுமார் பிரியதர்சினி தம்பதாகளின் செல்வப்புதல்வன் மிதுலன் நந்தகுமாரின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் மிதுலன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



17 பெப்ரவரி 2025 திங்கட்கிழமை புங்குடுதீவைச் சேர்ந்த சங்கீதபூஷணம் இசை ஆசிரியர் திரு நாகலிங்கம் சண்முகலிங்கம் அவர்களது 37வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 23 பெப்ரவரி 2025 ஞாயிற்றுக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



24 பெப்ரவரி 2025 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி புஸ்பராஜ் சியாமளா தம்பதிகளின் செல்வப்புதல்வி காயத்திரி புஸ்பராஜ் அவர்களின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி காயத்திரி தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



24 பெப்ரவரி 2025 திங்கட்கிழமை நாவலர்மடம் நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



01 மார்ச் 2025 சனிக்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த டாக்டர் இரத்தினவடிவேல் மயில்வாகனம் அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

## 31ம் நாள் நினைவஞ்சலி



### திரு கோகுலன் சண்முகம் (கோபி)

கட்டுடை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த கோபி என்று அன்பாக அழைக்கப்படும் திரு கோகுலன் சண்முகம் அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 05 மார்ச் 2025 புதன்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்ப நண்பர் திரு ஆர்.ஆர். ராஜ்குமார் அவர்கள் கோபியின் நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார். திரு கோகுலன் சண்முகம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது நண்பர் ராஜ்குமார் மற்றும் குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.



17 பெப்ரவரி 2025 திங்கட்கிழமை கனடா குடும்ப இணைவு நன்நாளாகும். அன்றைய தினத்திற்காக கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி குடும்பத்தினர் 02 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



05 மார்ச் 2025 புதன் கிழமை கனடாவில் வசிக்கும் திரு கண்ணன் இலங்கையன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு கண்ணன் இலங்கையன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



05 மார்ச் 2025 புதன்கிழமை கட்டுடை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கோகுலன் (கோபி) சண்முகம் அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவர்களது குடும்ப நண்பர் திரு ஆர்.ஆர்.ராஜ்குமார் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்



07 மார்ச் 2025 வெள்ளிக்கிழமை உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி முருகேசு பரிமளம் அவர்களது 14வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்


VIBRANT HOSPITALIT GROUP
25 YEARS
தமிலோசை வழங்கும்
Canada Tamil Music Festival
இசைக் குயில் 2025
APRIL
SATURDAY
12
2025
3 PM ONWARDS
ADMIT ONE
ENTRANCE
VIP
TICKET $20
VIP TICKETS
DURHAM CONVENTION CENTER
630 BRCK CRESCENT AJAX, ON L1Z 1C9 | 416 556 3219
Announcers
MUSICAL BAND
NATCHATHRAA MUSIC GROUP



நாட்டுப்பற்றாளர் **திரு. மதிசூடி** நினைவரங்கத்தில்
உங்கள் அபிமான
**ஈழநாடு** பத்திரிகையின்

# 32 வது ஆண்டு விழா




**SUNDAY**
**JUNE 01**
**2025**

**METROPOLITAN CENTRE**
**3840 FINCH AVE EAST**
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)

தொடர்புகளுக்கு
**ஈழநாடு**
**பரமேஸ்**
**416-841-9600**
eelanadu1993@gmail.com



# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



கனடா இந்து மாமன்றம்

CANADA HINDU MAAMANTRAM

## கனடா இந்து மாமன்றம் சுவையுடன் படைத்திடும்

## சர்க்கரைப் பொங்கல் விழா - 2025

## சமய அறிவு, பேச்சு, பண்ணிசைப் போட்டிகள்

இடம்: SRI SATHYA SAI BABA CENTRE OF SCARBOROUGH
5321 Finch Ave East, Scarborough ON. M1S 5W2

காலம்: **March 22, 2025 (Saturday) 9.00 AM**

**போட்டிகளுக்கு உரிய பிரிவுகள்:**

| | |
|---|---|
| மழலைகள் (JK) | : 01-01-2020 இற்குப் பின் பிறந்தோர் |
| ஆரம்பப் பிரிவு (SK) | : 2019 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 1 (Gr.1) | : 2018 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 2 (Gr.2) | : 2017 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 3 (Gr.3) | : 2016 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 4 (Gr.4) | : 2015 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 5 (Gr.5) | : 2014 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 6 (Gr.6) | : 2013 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 7 (Gr.7) | : 2012 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 8 (Gr.8) | : 2011 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்பும் பிறந்தோர் |

❋ மாற்றுத் திறன் மாணவர்களுக்கான சிறப்புப் போட்டிகள் தனிப்பிரிவாக நடாத்தப்படும்.

குறிப்பு:

1. சமய அறிவுப் போட்டிகள் பிரிவு 4ம் அதற்கு மேல் உள்ள பிரிவுகளுக்கு மட்டும் இடம்பெறும். கீழ்ப் பிரிவு மாணவர்கள் விரும்பினால் 4வது பிரிவில் பங்குபற்றலாம்.
2. புதிய பாடத்திட்டத்தின்படி போட்டிகள் இடம்பெறும். விபரங்களை, தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
3. போட்டியாளர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தைப் போட்டியின்போது கொண்டுவரல் வேண்டும்.
4. மேற்கண்ட போட்டிகளில் பங்குபற்ற ஒரு போட்டியாளருக்கு $5.00 அறவிடப்படும்.
5. ஏப்பிரல் 27, 2025ல் நடைபெறும் சர்க்கரைப் பொங்கல் விழாவில் போட்டிகளில் பங்கு பற்றிய மாணர்களைப் பாராட்டி பரிசில்கள் வழங்கப்படும்.

**மார்ச்சு 05, 2025க்கு முன் தரவேண்டிய தகவல்கள்:**

முதல் பெயர்: ............

குடும்பப் பெயர்: ............

பிரிவு: ............

பிறந்த திகதி: ............

தொலைபேசி எண், email: ............

............

பங்குகொள்ளும் போட்டிகள்:

☐ பேச்சு ☐ பண்ணிசை ☐ சமய அறிவுப் போட்டி

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

Secretary,
Canada Hindu Maamantram,
41, Longbow Sq, Scarborough, ON. M1W 2W6
email: canhinduma@gmail.com

மேலதிக தொடர்புகளுக்கு: 416.497.4741
647.620.5171, 416.356.7323
647.992.0587, 905.785.6526

**விண்ணப்ப முடிவு திகதி: மார்ச்சு 05, 2025**

# புதிய கூட்டுக்கள்! பழைய பகைமைகள்!

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -





உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நோக்கித் தமிழ்க்கட்சிகள் புதிய ஒருங்கிணைப்புகளுக்குப் போகத் தொடங்கியுள்ளன. அதை வரவேற்க வேண்டும். கடந்த 15ஆண்டுகளில் முன்னெந்தத் தேர்தலையும் விட தென்னிலங்கை மையக் கட்சிகளுக்கும் சுயேச்சைகளுக்கும் எதிராக அணி திரள வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கும் ஒரு தேர்தல் இது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் என்பது பெருமளவுக்கு உள்ளூர் நிலைமைகளை உள்ளூர் சாதி,சமய,வட்டார உணர்வுகளைப் பிரதிபலிப்பவை. உள்ளூர்த் தலைமைகளைக் கட்டி எழுப்புவதற்கான ஒரு களம். ஆனால் அவை உள்ளூர்த் தலைமைகள் மட்டுமல்ல. ஒரு தேசியவாத அரசியலுக்கான அடிக்கட்டுமாணம் என்ற விளக்கத்தோடு மக்கள் மட்டக் கட்டமைப்புகளை அங்கிருந்து தான் பலப்படுத்த வேண்டும். அதாவது உள்ளூர் உணர்வுகளை அவற்றின் அசமத்துவங்களை நீக்கி தேசியக் கூட்டுணர்வாகத் திரட்ட வேண்டும்.கீழிருந்து மேல் நோக்கி.

அந்த அடிப்படையில் பார்த்தால் உள்ளூர்த் தலைமைகளை எப்படித் தமிழ் தேசியப் பண்புமிக்கவர்களாக வார்த்தெடுப்பது என்பதற்கான ஒரு பயில் களம் தான் உள்ளூராட்சி மன்றங்கள். ஆனால் தமிழ்க்கட்சிகளிடம் அது தொடர்பாக தமிழ்த்தேசிய நோக்குநிலையிலிருந்து ஆழமான நீண்டகால நோக்கிலான விளக்கங்களும் பார்வைகளும் உண்டா?

கடந்த வாரம் ஜனநாயகத் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் முன் முயற்சியால் உருவாக்கப்பட்ட கூட்டு எனப்படுவது தேர்தல்கூட்டு அல்ல என்று கூறப்பட்டாலும் அது நடைமுறையில் ஒரு தேர்தல் கூட்டாகத் தான் காணப்படுகின்றது. அக்கூட்டுக்குள் முதலில் காணப்பட்ட இரண்டு கட்சிகளும் ஒரு சுயேச்சைக் குழுவும் வெளியேறக்கூடிய ஆபத்துக்களை இக்கட்டுரை எழுதப்படுகையில் உணரக்கூடியதாக இருந்தது.

தேசிய மக்கள் சக்தி உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றுவதைத் தடுக்கும் நோக்கிலான கூட்டு அது என்று எடுத்துக் கொண்டால் தமிழ்த்தேசிய வாக்குகளைத் திரட்டுவதற்கான ஒரு கூட்டு என்றும் அதை வியாக்கியானப் படுத்தலாம். ஆயின் அக்கூட்டானது தமிழ்த்தேசிய வாக்குகளை கொத்தாகத் திரட்டும் சக்தி மிக்கதா?

தமிழ்த் தேசியப் பரப்பில் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின் இரண்டு விதமான ஒருங்கிணைப்பு முயற்சிகள் உண்டு. ஒன்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியால் முன்னெடுக்கப்படுகின்ற யாப்புருவாக்க முயற்சிகளை நோக்கிய ஒருங்கிணைவு. அதில் சிறீதரன் முன்னணியோடு இணக்கமாகக் காணப்படுகின்றார்.

ஆனால் தமிழரசுக் கட்சிக்குள் சுமந்திரன் அணியும் அந்த அணியின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் மத்திய குழுவும் அந்த ஒருங்கிணைப்பு முயற்சிகளுக்கு எதிராக இருக்கின்றன. இந்த விடயத்தில் சிறீதரனுக்கும் சுமந்திரனுக்கும் இடையிலான தலைமைத்துவப் போட்டி முன்னணியின் ஒருங்கிணைப்பு முயற்சிகளில் பிரதிபலிப்புகளை ஏற்படுத்துகிறது.

இது ஏறக்குறைய பொது வேட்பாளரின் போது காணப்பட்ட ஒரு நிலை. அங்கேயும் தமிழரசுக் கட்சிக்குள் காணப்படும் உட்பகையானது பொது வேட்பாளர் தொடர்பான நிலைப்பாடுகளில் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தியது.

ஆனால் இந்த இரண்டு விடயங்களிலும் சிறிதரன் தேசத்திரட்சிக்கு ஆதரவாக நின்றார்நிற்கின்றார். அவரைப் பொறுத்தவரை அது தவிர்க்க முடியாதது. கட்சிக்குள் அவருடைய நிலையை பலப்படுத்துவதற்கு அவருக்கு வெளிக் கூட்டுகள் அவசியம்.

சிறீதரனுக்கும் சுமந்திரனுக்கும் இடையிலான பகை கஜேந்திரகுமாரின் ஒருங்கிணைப்பு முயற்சிகளில் பிரதிபலிப்புகளை ஏற்படுத்துவதைப் போலத் தான் சந்திரகுமாருக்கும் சிறீதரனுக்கும் இடையிலான பகை, புதிய கூட்டு முயற்சிகளிலும் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தும். அப்படித் தான் மணிவண்ணனுக்கும் கஜேந்திரக்குமாருக்கும் இடையிலான பகையுணர்வும், தவராசாவுக்கும் சுமந்திரனுக்கும் இடையிலான பகையுணர்வும் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தும்.

சுமந்திரனுக்கும் சிறீதரனுக்கும் இடையிலான பகை எனப்படுவது பொது எதிரிக்கு எதிரான பகையுணர்வை விடவும் ஆழமானதாகவும் கூர்மையானதாகவும் வளர்ந்து வருகிறது. அது போலவே சிறீதரனுக்கும் சந்திரகுமாருக்கும் இடையிலான பகை என்பது பெருமளவுக்கு மாவட்ட மட்டப் பண்பை கொண்டது. அதிகம் உள்ளூர் நிலைமைகளால் தீர்மானிக்கப்படுவது.

புதியகூட்டை அறிவிக்கும் முதலாவது சந்திப்பின் போது இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. இக்கூட்டுக்குள் சந்திரகுமார் இருக்கும் வரை சிறீதரனைக் கொண்டு வருவது கடினம் என்று சுட்டிக் காட்டப்பட்ட பொழுது, சந்திரகுமார் கூறியிருக்கிறார், பிரச்சினையில்லை சிறீதரன் இந்த அணிக்குள் வருவார் என்றால் நாங்கள் தமிழரசுக் கட்சியோடு போகிறோம் என்று. கிளிநொச்சியில் சந்திரகுமாருக்கும் சிறீதரனுக்கும் இடையிலான பகையும் சிறீதரனுக்கும் சுமந்திரனுக்கும் இடையிலான பகையும் அங்கே புதிய சேர்க்கைகளைத் தீர்மானிக்கின்றன. சுமந்திரனுக்கு ஆதரவான அணி அங்கு சந்திரகுமாருக்கு நெருக்கமாகக் காணப்படுகின்றது

அப்படித்தான் மணிவண்ணனின் விடயத்திலும் மணிவண்ணன் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்மக்கள் கூட்டணியும், ஐங்கரநேசனும் புதிய கூட்டுக்குள் சந்திரகுமார் இணைக்கப்பட்டிருப்பதை ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிகிறது. தமிழரசுக் கட்சியில் இருந்து வெளியேறிய தவராசா அணியும் அக் கூட்டுக்குள் முரண்படுவதாகத் தெரிகிறது. அதற்காக இவர்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடு ஏதும் புதிய உடன்படிக்கைக்கு போகக் கூடுமா? தவராசா அணிக்கும் சுமந்திரன் அணிக்கும் இடையிலான இடைவெளியும் மணிவண்ணனுக்கும் முன்னணிக்கும் இடையிலான பகையும் இக் கூட்டுக்களைத் தீர்மானிக்கும் காரணிகளாகும்.

மணிவண்ணன்,ஐங்கரநேசன் தவராசா அணி போன்றவற்றைச் சுதாகரிப்பதற்காக புதிய கூட்டானது சந்திரகுமாரை வெளியே விடுமா? இல்லை. அதற்கான வாய்ப்புக்கள் இப்போதைக்குக் குறைவு. ஏனென்றால் புதிய கூட்டை உருவாக்கும் முன் முயற்சிகளை எடுத்த ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஒரு சினேக சக்தியாக கருதவில்லை. தவிர ஏற்கனவே யாப்புருவாக்க முயற்சிகளுக்காக செல்வம் அடைக்கலநாதனை கஜேந்திரக்குமார் சந்தித்திருக்கும் ஒரு பின்னணியில் தான் மேற்படி கூட்டு உருவாக்கப்பட்டிருக்கிறது.

அதற்குள் விக்னேஸ்வரனின் பிரதிநிதியாக மணிவண்ணனும் கலந்து கொண்டார். விக்னேஸ்வரனின் கட்சிக்கும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையிலான இடைவெளியை தீர்மானிக்கும் அம்சங்களில் மணிவண்ணனும் ஒருவர். எனவே கூட்டிக் கழித்து பார்த்தால் புதிய கூட்டுக்குள் பழைய பகைமைகள் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம்.

தமிழ்மக்கள் உருகிப் பிணைந்த ஒரு தேசத் திரட்சியாக இல்லை.த மிழ்த் தேசியப் பரப்பில் எத்தனை துருவ நிலைகள்? ஆயுதப் போராட்டத்தில் இயக்கங்களுக்குள் ஏற்பட்ட பகைமையின் தொடர்ச்சியாகக் காணப்படும் தியாகி–துரோகி என்ற பகைநிலை. கட்சிகளுக்கு இடையிலான பகைக்கட்சிகளுக்குள் காணப்படும் குழுக்களுக்கு இடையிலான பகைக்கட்சிகளில் இருந்து வெளியேறியவர்களுக்கும் தாய்க்கட்சிக்கும் இடையிலான பகை... என்றிவ்வாறாக பல்வேறு பகைநிலைகள் உண்டு. இந்தப் பகைமைகள் அனைத்தும் பழையவை.இவை புதிய கூட்டுக்களை எவ்வாறு தீர்மானிக்கப் போகின்றன?

இப்பொழுது தமிழ்த்தேசியப் பரப்பில் நான்கு தரப்புக்கள் துலக்கமாக தெரகின்றன. முதலாவது தமிழரசுக் கட்சி. இரண்டாவது முன்னணி. மூன்றாவது புதிய கூட்டணி.நாலாவது இவற்றுக்குள் வராத சிறிய கட்சிகளும் சுயேச்சைகளும்.

தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணி தேர்தலை தனியாகவே எதிர கொள்ளப் போவதாக தெரிகிறது. நாடாளுமன்றத் தேர்தலில் அதிக ஆசனங்களை வென்ற கட்சி என்ற அடிப்படையில் தாமே உள்ளதில் பெரிய கட்சி,பிரதான கட்சி, தலைமை தாங்கும் கட்சி என்ற பொருள்பட சுமந்திரன் கருத்துக்கூறி வருகிறார். தேர்தலுக்கு முன் கூட்டுக்களை உருவாக்காமல் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் கூட்டுக்களை வைத்துக் கொள்ளலாம் என்றும் அவர்கள் சிந்திப்பதாகத் தெரிகிறது.

இது தாங்களே பெரிய கட்சி என்ற அடிப்படையில் அவர்கள் வகுத்துள்ள தந்திரம்.தேர்தலுக்குப் பின் கூட்டுக்களை வைக்கும்பொழுது தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் ஏனைய கட்சிகளின் உயரம் எதுவென்று தெரிந்து விடும். அந்த அடிப்படையில்தான் அவர்கள் பேரம்பேச முடியும்.மாறாக தேர்தலுக்கு முன் கூட்டை வைத்தால்,கட்சிகளின் உயரம் இதுவென்று தெரியாமல் அவற்றின் தகுதிக்கு மீறி இடங்கொடுக்க வேண்டிவரும். இது தாமே தீர்மானிக்கும் கட்சி என்ற அடிப்படையில் கட்சி நோக்குநிலையில் இருந்து எடுத்த முடிவு.நிச்சயமாக தேசத்திரட்சி என்ற நோக்குநிலையில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு முடிவு அல்ல.

தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு இறந்த காலத்திலிருந்து எதையும் படித்திருக்கவில்லை என்றே தோன்றுகிறது. உள்ளதில் பெரிய கட்சீ தலைமை தாங்கும் கட்சி என்று தங்களை அழைத்துக் கொள்ளும் ஒரு கட்சியானது தேசியவாத அரசியலுக்குத் தலைமை தாங்கும் கட்சி தாங்கள்த ான் என்ற பொறுப்பை உணர்ந்து முடிவெடுக்கவில்லை .தேசத் திரட்சியை நோக்கித் தான் கட்சிகளை ஒருங்கிணைக்க வேண்டும். தேர்தலை நோக்கி அல்ல.அது மிக முக்கியம்.அந்த ஒருங்கிணைப்பு 2009க்கு பின்னரான புதிய பண்புருமாற்ற அரசியலாகவும் இருக்க வேண்டும். அது மிக முக்கியம். மாறாக அவரவர் பலத்தின் அடிப்படையில் கூட்டுக்களை வைத்துக் கொள்ளலாம் என்பது முழுக்க முழுக்க தேர்தல் நோக்கு நிலையிலானது.சில சமயங்களில் தேர்தல் நோக்கு நிலையானது தேசத் திரட்சிக்கு எதிராக இருக்க முடியும்.

தேசியவாத அரசியல் என்பது ஒரு மக்கள் கூட்டத்தைத் தேசியக் கூட்டுணர்வின் அடிப்படையில் பெரிய திரளாகக் கூட்டிக்கட்டுவது. தன்னைத் தலைமை தாங்கும் சக்தியாகக் கருதும் தமிழரசுக் கட்சி அதற்குத் தேவையான வழி வரைபடத்தைக் கொண்டிருக்கின்றதா? இல்லை.முதலில் அவர்கள் தங்களை ஒரு உருகிப்பிணைந்த அமைப்பாகக் கட்டியெழுப்ப வேண்டும். தன்னை ஒரு கட்டிறுக்கமான கட்சியாகத் திரட்டமுடியாத ஒரு கட்சியானது எப்படி அரசற்ற, நாடற்ற ஒரு

(20ம் பக்கம் பார்க்க)

# எங்கே தொடங்கிய தவறு?

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத் தொடர் கடந்த 24 ஆம் திகதி ஆரம்பமாகிய போது, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க், இலங்கை நிலவரம் தொடர்பான எந்த கருத்தையும் முன்வைத்திருக்கவில்லை. ஆனால், அவரது உரையில் இடம் பெற்றிருக்கின்ற சில முக்கியமான விடயங்கள், கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை.



இரண்டாம் உலகப் போருக்கு பின்னைய தசாப்தங்களில், கட்டமைக்கப்பட்ட உலகளாவிய பாதுகாப்பு அமைப்பு, முன் ஒருபோதும் இல்லாதளவுக்கு நெருக்கடியை சந்தித்திருப்பதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார். இந்த சூழ்நிலையை எதிர் கொள்வதற்கு, உலகளாவிய பாதுகாப்பு முறையை வலுப்படுத்துவதற்கு, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அழைப்பு விடுத்திருக்கின்றார். இல்லாவிட்டால் உலகம் கடந்த காலத்தைப் போல, அநீதிகளால் பாதிக்கப்படும் என ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் விடுத்துள்ள எச்சரிக்கையை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது.

சர்வாதிகாரிகள், பலம் வாய்ந்தவர்கள் மற்றும் தன்னலக் குழுக்கள் காரணமாக மனித உரிமைகள் குறித்த உலகளாவிய கருத்து சிதைந்து வருகின்றது என அவர் கவலையுடன் எச்சரித்திருக்கிறார்.

மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவை சமூகங்கள் மற்றும் சர்வதேச உறவுகளுக்கு அடித் தளமாகயிருப்பதை உறுதி செய்வதற்காக அனைவரும் முயற்சி செய்வது அவசியம் என குறிப்பிட்டுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர், இல்லாவிட்டால் ஆபத்து என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்காவில் ஏற்பட்டிருக்கின்ற ஆட்சிமாற்றம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இந்த எச்சரிக்கைக்கும் கருத்துக்கும் முக்கியமான காரணியாக அமைந்திருக்கிறது. அமெரிக்காவில் ஆட்சிக்கு வந்துள்ள டொனால்ட் ட்ரம்ப் மனித உரிமைகள், மனிதாபிமானம் போன்றவற்றுக்கு அப்பால் தனிப்பட்ட நலன்களை குறிவைத்து செயற்படுகிறார் என்பதை கூறித் தெரிய வேண்டியதில்லை. நீதி, நியாயம், நேர்மை, மனித உரிமைகள் போன்றவற்றின் அடிப்படையில் ட்ரம்ப் அல்லது அவரது அரசாங்கத்தின் தீர்மானங்கள் அமைந்திருக்கவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இருந்து அமெரிக்காவை விலகச் செய்தார். உலக சுகாதார நிறுவனத்திற்கான நிதி பங்களிப்பை நிறுத்தினார். இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் இன்று உலகில் சுகாதார நெருக்கடி மனிதாபிமானம் மற்றும் மனித உரிமை நெருக்கடிகள் தோற்றம் பெறுவதற்கு வழிவகுக்கப்பட்டிருக்கிறது.

உலகளாவிய நீதியும் மனித உரிமைகள் தொடர்பான ஒருமித்த கருத்தும் சிதைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. காஸாவில் இருந்து பலஸ்தீன மக்களை அடியோடு அகற்றுகின்ற ஒரு திட்டத்தை முன்வைத்தவர் தான் டொனால்ட் ட்ரம்ப்.

ஒரு மக்கள் கூட்டத்தை அவர்களின் பாரம்பரிய வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றுவது என்பது இனஅழிப்பு என ஐ.நாவின் சாசனம் கூறுகிறது. அப்படி இருந்தும், டொனால்ட் ட்ரம்ப் இப்படி ஒரு திட்டத்தை முன்வைப்பதற்கு தயங்கவில்லை. இது அமெரிக்காவின் இன்றைய நடத்தையை காண்பிக்கின்றது. ரஷ்யாவின் படையெடுப்பிற்கு உள்ளாகிய உக்ரேனுக்கு அமெரிக்காவின் முன்னைய ஆட்சியாளர்கள் பக்க பலமாக இருந்தார்கள். நிதி உதவியை கொட்டிக் கொடுத்தார்கள். ஆயுதங்களை அள்ளி வழங்கினார்கள். திடீரென அங்கு ஆட்சிக்கு வந்துள்ள ட்ரம்ப் நிர்வாகம், கொடுத்த ஆயுதங்கள், நிதி உதவி போன்றவற்றுக்கு ஈடாக உக்ரேனில் பூமிக்கு அடியில் உள்ள கனிமங்களை தருமாறு கேட்கிறது. அப்படி தர மறுத்த போது உக்ரேன் ஆட்சியாளரான ஸெலென்ஸ்கியை பதவியில் இருந்து துரத்துவதற்கும் முயன்றது. ரஷ்யாவுடனான போருக்கு மிகவும் அவசியமான 'ஸ்டார்லிங்க்' இணையத் தொடர்பை துண்டிக்கப் போவதாகவும் மிரட்டியது. இதனால் வேறுவழியின்றி, அமெரிக்காவுடன் உடன் பாட்டை செய்து கொள்வதற்கு இணங்கியிருக்கிறார் ஸெலென்ஸ்கி. இது போல, பிற நாடுகளை அச்சுறுத்தி அடி பணிய வைக்கின்ற மோசமான செயற்பாட்டில் அமெரிக்காவின் இன்றைய அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது.




கனடாவை தனது 51ஆவது மாகாணமாக இணையுமாறும் ட்ரம்ப் மிரட்டிக் கொண்டிருக்கிறார். கிறீன்லாந்தை கைப்பற்ற போவதாக அச்சுறுத்துகிறார். சீனாவுடன் பொருளாதார ஒத்துழைப்பு உடன்பாட்டை செய்து கொண்ட பனாமாவிடம் இருந்து பனாமா கால்வாயை கைப்பற்ற போவதாக அச்சுறுத்தி, அந்த வழியாக செல்லும் அமெரிக்க கப்பல்களுக்கு கட்டணம் அறவிடுவதையும் தடுத்து நிறுத்தி இருக்கிறார்.

மெக்ஸிக்கோ வளைகுடாவை, அமெரிக்க வளைகுடா என தன்னிச்சையாக பெயர் மாற்றி விட்டு செய்திகளில் அவ்வாறு குறிப்பிடாத அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனத்தை வெள்ளை மாளிகைக்குள் அனுமதிக்காமல் தடை செய்திருக்கிறார் ட்ரம்ப். அடிப்படையில் அவர் ஒரு செல்வந்தர். அவரது செயற்பாடுகள் அனைத்தும் வர்த்தகரைப் போலவே அமைந்திருக்கிறது.

ஒரு வர்த்தகர் எப்பொழுதும் தனது வர்த்தகத்தை பலப்படுத்திக் கொள்வதற்கும் பாதுகாத்துக் கொள்வதற்கும், பிற வர்த்தகர்களை வளரவிடாமல் தடுப்பதற்கு என்ன செய்ய முடியுமோ அதனை செய்வார். அதே பாணியில் தான் ட்ரம்ப் பிற நாடுகளை பிற மக்களையும் கையாளப் பார்க்கிறார். அமெரிக்க ஜனாதிபதி பதவியில் இருந்த ஜோ பைடன் பிரியாவிடை பெறும் போது நிகழ்த்திய உரையில், செல்வந்தர்களின் கையில் அரசு அதிகாரம் கிடைத்திருப்பது ஆபத்தானது என சுட்டிக்காட்டியிருந்தார்.

அவர் அப்படிக் குறிப்பிட்டது, டொனால்ட் ட்ரம்ப் மற்றும் இலோன் மஸ்க் ஆகியோரை தான். இந்த இரண்டு பேருமே எடுக்கின்ற நடவடிக்கைகள் நீதிக்கு முரணானதாக அமைந்திருக்கின்றன. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் உரையில் மறைமுகமாக சுட்டிக் காட்டப்பட்டிருப்பதும் கூட, இவர்களின் இந்த அச்சுறுத்தலைத் தான். இது ஆபத்தானது. பிற நாடுகளையும் மனித உரிமைகள் விடயத்தையும் பலவீனப்படுத்தவும், அச்சுறுத்தவும் காரணமாகி விடும் என அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

மனித உரிமைகள் குறித்த உலகளாவிய ஒருமித்த கருத்து சிதைந்து வருவதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் குறிப்பிட்டது, ஒரு வகையில் இலங்கை தொடர்பான சர்வதேச நிலைப்பாடு பலவீனப்பட்டு வருவதற்கும் பொருத்தப்பாடுடையது தான். இலங்கையில் இடம்பெற்ற கடந்த காலமீறல்களுக்கு பொறுப்புக் கூறலையும் நீதியையும் உறுதிப்படுத்துவதற்கும் நல்லிணக்கத்தையும் அமைதியையும் ஏற்படுத்துவதற்கும், தலையீடு செய்த நாடுகள், இப்பொழுது இந்த விடயத்தில் போதிய அக்கறை செலுத்தவில்லை.



இலங்கை அரசாங்கம் 16 ஆண்டுகளாக சர்வதேச நீதிப் பொறிமுறைகளை நிராகரித்து அதற்கு எதிராக செயல்படுகிறது. உள்நாட்டு முறைகளின் ஊடாகவே தீர்வு வழங்கப்படும் என்கிறது. ஆனால், அந்த முயற்சி இது வரை கடுகளவேனும் முன்னகரவில்லை. காலத்தை கடத்தி ஏமாற்றுகின்ற தந்திரோபாயமே முன்னெடுக்கப்படுகிறது அப்படி இருந்தும் சர்வதேச சமூகம் இந்த விடயத்தை தொடர்ந்து முன்னெடுப்பதற்கும் கையாளுவதற்கும் போதிய அக்கறை செலுத்தவில்லை.

ஐ.நா. உரிமைகள் மனித ஆணையாளரின் தொடக்க உரையில் கூட இந்த விடயம் விடுபட்டுப் போய்விட்டது. இலங்கையில் நடந்த மீறல்கள் பற்றிய கரிசனைகள் குறைந்து அதன் மீதான அக்கறைகளும் கவனமும் குறைந்து வருகிறது. இந்தச் சூழல் ஆபத்தானது. ஏனென்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படவில்லை. மனித உரிமைகள் நிலை நிறுத்தப்படவில்லை. குற்றம் இழைத்தவர்கள் தண்டிக்கப்படவில்லை. அதற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள், பொறுப்புக்கூறுவதற்கான எந்த நகர்வுகளும் எடுக்கப்படவில்லை. இது உலகளாவிய மனித உரிமை பேண்தகு நிலையை கேள்விக்கு உட்படுத்த

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



ஆரம்பித்து விட்டது.

மனித உரிமைகளும் சட்டத்தின் ஆட்சியும் சர்வதேச உறவுகளுக்கு அடித்தளமாக இருப்பதை உறுதி செய்ய வேண்டிய அவசியத்தை ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வலியுறுத்தி இருந்தாலும், அத்தகைய ஒரு நிலை இருந்திருந்தால் இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்பட்டிருக்க வேண்டும். அந்த நிலை சரியத் தொடங்கியது, சிதையத் தொடங்கியது இப்போது அல்ல.

16 ஆண்டுகளுக்கு முன்னர் சர்வதேச சமூகத்தின் பங்களிப்புடன் இலங்கையில் இனஅழிப்பு நடந்த போது அது கண்டு கொள்ளப்படாமல் போனதும், தடுக்கப்படாமல் போனதும், அது நிகழ்ந்த பின்னர் அதற்கு எதிராக நீதியை நிலை நாட்டுவதில் உலகம் ஒன்றுபட தவறிய போதுமே, அந்த நிலை உருவாகத் தொடங்கிவிட்டது. இன்று வரை இதற்கு நீதியை பெற்றுக் கொள்ள முடியாமல் போராடுகின்ற இனமாக தமிழர்கள் இருக்கிறார்கள். இந்தநிலை இருப்பதால்தான் இன்று காஸாவில் இருந்து பலஸ்தீன மக்களை முற்றாக வெளியேற்றும் திட்டம் ஒன்றை, எந்த கூச்சமும் இல்லாமல் அமெரிக்க ஜனாதிபதி முன்வைத்தார். இனஅழிப்பு என்பதை தெரிந்து கொண்டே அவர் அந்த திட்டத்தை முன் வைத்தார்.

அப்படியானால் இந்த வீழ்ச்சி எப்போது தொடங்கியது? இலங்கையின் இனப் படுகொலை கண்டு கொள்ளப்படாமல் போன போதே அந்த வீழ்ச்சி தொடங்கி விட்டது. அதற்கு நீதி கிடைக்கும் வழங்கப்படாமல் தட்டிக் கழிக்கப்படும் போதே அது வளர்ச்சி பெற தொடங்கி விட்டது. அதன் நீட்சி தான் இப்பொழுது காஸாவில் இருந்து பலஸ்தீனர்களை அகற்றுகின்ற திட்டம். இந்தத் திட்டம்.

நாளை இன்னொரு நாட்டுக்கு எதிராக இன்னொரு இனத்துக்கு எதிராக முன்னெடுக்கப்படாது என்று யாரும் நம்ப முடியாது. ஏனென்றால், இப்பொழுது உலகம் முழுவதும் பண பலம் படைத்தவர்களின் ஆட்சி அதிகாரம் மேலோங்கி வருகிறது. அவர்களின் அதிகாரம் கட்டுமீறி செல்லுகின்ற போது, சர்வாதிகாரத் தனங்களே கோலோச்சும். அத்தகைய நிலையில் மனித உரிமைகளுக்கும் இடமே இருக்காது.

# அரச பாதீடு:- மாற்றமா? ஏமாற்றமா?

அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தின் மீதான விவாதம் பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியில் சமூக, அரசியல் மட்டத்திலும் பொருளாதார வட்டாரங்களிலும் நடந்து கொண்டிருக்கிறது. இது ஒரு மாறுதலான வரவு செலவுதிட்டம். மக்கள் நலன், தேசியப் பொருளாதார வளர்ச்சி போன்றவற்றை முன்னிலைப்படுத்தியதாக இந்த வரவு செலவுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது என்கிறது அரசாங்கம். அரசாங்கத்தை ஆதரிப்போரின் கருத்தும் இதுவே.

ஆனால், இதில் எந்தப் புதுமையும் இல்லை. ஐ.எம். எவ்யையும் ரணில் விக்கிரமசிங்கவையும் கடந்து எந்தப் புதுமையையும் காணமுடியவில்லை. ஐ.எம்.எவ் — ரணில் விக்கிரமசிங்கவின் கூட்டு வடிவத்தின் இன்னொரு பிரதிமையே இந்த வரவு செலவுத் திட்டம்'' என்கின்றன எதிர்க்கட்சிகள்.

வரவு செலவுதிட்டத்தில் வடக்கிற்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவத்தை அரசாங்கம், கிழக்கிற்கு வழங்கத் தவறியது ஏன்? என்று கேள்வி எழுப்பியிருக்கின்றனர் கிழக்கு மாகாண மக்கள் பிரதிநிதிகள்.

வடக்கிற்கு ஒதுக்கப்பட்ட நிதி யாழ்ப்பாணத்துக்குள் மட்டும் செலவழிக்கப்படாமல், வன்னிக்கும் பகிரப்பட வேண்டும். குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்கின்றனர் வன்னித் தரப்பு மக்கள் பிரதிநிதிகளும் மக்கள் அமைப்பினரும். தேசிய பொருளாதார வளர்ச்சியை எட்டுவதாக இருந்தால் அல்லது அதை நோக்கி முயற்சிப்பதாக இருந்தால் அதற்குரிய வகையில் தேசியப் பொருளாதாரக் கொள்கை வகுக்கப்பட வேண்டும். அதைச் செய்யாமல் இந்த மாதிரியான சிறு சீரமைப்பு முயற்சிகள், பொருளாதார வளர்ச்சி என்ற கற்பனையான உலகத்தையே உருவாக்கும். அது மக்களுக்கோ நாட்டுக்கோ பெரிய நன்மைகளைத் தராது என்கிறார்கள் பொருளாதாரத் துறையினர்.

ஒப்பீட்டளவில் முன்னேற்றமான பாதீடாக இருந்தாலும் பாதுகாப்புத் துறைக்கு ஒதுக்கப்பட்ட செலவீனம் நாடு, பொருளாதாரத் துறையில் முன்னோக்கிச் செல்வதைப் பற்றிச் சீரியஸாகச் சிந்திக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது. இந்த அரசாங்கத்துக்கும் தடுமாற்றங்கள் உள்ளன என்பதைக் காட்டுகிறது என்று கூறுகிறார்கள் இன்னொரு தரப்பினர்.

இப்படிப் பல விதமான அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கும் இந்தப் பாதீட்டு விவாதத்தின் போது நாம் சில விடயங்களைக் கவனப்படுத்த வேண்டும்.

வரவு செலவுத் திட்டத்தில் இப்போதே துண்டுவிழும் தொகையாக 2,200 பில்லியன் உள்ளது. எதிர்பார்க்கப்படும் வருமானத்தின் மதிப்பீடு, 4,990 பில்லியன் ரூபாய். செலவு 7,190 பில்லியன் ரூபாய். என்றால் வரவுக்கு மீறிய செலவே. ஆக வரவைக் கூட்டுவதைப் பற்றியே நாம் சிந்திக்க வேண்டும். அதாவது அதற்கான ஏற்பாடுகளை.

இதற்கு கிராமியப் பொருளாதாரத்தைப் பலப்படுத்தினால் நாட்டின் பொருளாதாரத்தை 3 — 4 வீதமாக அதிகரிக்க முடியும் வலுப்படுத்த முடியும் என்று ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தெரிவித்துள்ளார். இதற்காக அரசாங்கம் 1400 பில்லியன் ரூபாயை ஒதுக்கியுள்ளது. இந்த அடிப்படையிலான எண்ணக் கருவைப் பகிரவும் திட்டமிடவும் மாவட்டச் செயலாளர்கள் அழைக்கப்பட்டு, அவர்களுடன் உரையாடலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனால் ஜனாதிபதியோ அரசாங்கமோ எதிர்பார்க்கின்றபடி — நம்புகின்றபடி — இதில் எந்தளவுக்கு முன்னேற்றம் ஏற்படும் என்பது கேள்வியே! ஏனென்றால், கடந்த காலத்தில் அரச நிர்வாகம் மிகப் பலவீனமான முறையிலேயே செயற்பட்டுள்ளது. மாவட்டச் செயலகங்களின் திட்டமிடலும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதும் பெருங்குறைபாடாகவே இருந்தது.




குறைந்த பட்சம் தமது திட்டங்களின் பெறுபேறு என்ன? அவை உருவாக்கிய சமூக விளைவுகள் என்ன என்பதைக் கூட அவை திரும்பிப் பார்த்ததும் இல்லை. மதிப்பீடு செய்ததும் இல்லை. வேண்டுமானால், இதைக்குறித்து மாவட்டச் செயலாளர்களிடத்திலும் திட்டமிடற் பணிப்பாளர்களிடத்திலும் ஜனாதிபதி விளக்கம் கேட்கலாம். அப்படிக் கேட்டால் அதற்குக் கதை சொல்லக் கூடிய (கதை விடக்கூடிய) அளவுக்கு நிபுணத்துவத் திறனைக் கொண்டிருக்கிறார்கள் அத்தனை அதிகாரிகளும்.

பதிலாக குறைபாடுகளை நிவர்த்தி செய்வதைப் பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. இதில் அபூர்வமாக ஒரு சிலர் விலக்காக இருக்கலாம். மற்றும்படி பலருடைய நிலை இதுதான்.

இதற்குக் காரணம், கடந்த ஆட்சிகளில் நடந்த தவறுகளும் பழக்கங்களும் தான். போதாக்குறைக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவித் திட்டங்கள். கருத்திட்டங்கள், பயிலரங்குகள், பயிற்சித்திட்டங்கள், உதவிகள், கலந்துரையாடல்கள், கள ஆய்வுகள் என்றெல்லாம் பெரும் செலவிலும் பெரும் எடுப்பிலும் மேற்கொள்ளப்பட்ட பல திட்டங்களும் பல நடவடிக்கைகளும் தோல்வியடைந்ததே வரலாறு.

இதை மறுத்தால், 'அவை எத்தகைய பெறுபேறுகளை உருவாக்கின?' என்ற புள்ளி விவரத்தைச் சான்றாதாரங்களுடன் எந்த மாவட்டச் செயலகமாவது வெளியிடத் தயாரா?

எனவே தான் மாவட்டச் செயலக அதிகாரிகளை நம்பி அரசாங்கம் கிராமியப் பொருளாதார அபிவிருத்தியைப் பற்றிப் பேசுவது பொருத்தமானதல்ல. ஆனால், அவர்களைக் கொண்டு தான் இதைச் செயற்படுத்தவும் வேண்டும். அவர்கள் மாவட்டத்துக்கான அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள். அவர்கள் தான் அரசின் நேரடிப் பணிப்புக்கும் செயலாக்கத்துக்கும் பொறுப்பானவர்கள்.

ஆகவே என்னதானிருந்தாலும் அவர்களுக்கூடாகத் தான் எதையும் செய்ய முடியும். அப்படியென்றால், அவர்களை குணமாற்றம் செய்ய வேண்டும். பொறிமுறைகளை முற்றாக மாற்றியமைக்க வேண்டும். திட்டமிடற் செயலகங்களின் மூளையையும் மனதையும் புதிதாக்க வேண்டும். முழுமொத்தமாக புத்தாக்கத்துக்குரிய வகையில் நிர்வாகத்தையும் அதை இயக்கும் தரப்பினரையும் மாற்றியமைக்க வேண்டும்.

இதனால்த ான் முறைமை மாற்றம் (Systrm change) வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. இதை அரசாங்கமும் ஏற்றுள்ளது. ஆனால், அதைச் செய்வதற்குத் தயக்கம் காட்டப்படுகிறது? இது ஏன்? நாட்டுக்குத் தேவையாக இருப்பது அறுவைச் சிகிச்சையே. அதையே மக்களும் எதிர்பார்க்கிறார்கள். என்பதால் தான் வழமைகளுக்கு மாறாக அவர்கள் ேயை ஆதரித்தனர். அநுர குமார திசநாயக்கவை — விரும்பினர் — நம்பினர், நம்பிக் கொண்டிருக்கின்றனர்.

பதிலாக பழைய புண்ணுக்கு மேலே களிம்பைப் பூசுவதால் பயனில்லை. இதொன்றும் கடினமான விமர்சனமல்ல. அரசாங்கத்தை உற்சாகப்படுத்துவதற்கான சொற்களேயாகும். கடந்த ஆட்சிகளின் போது நடந்த தவறுகளைப் பட்டியலிடுவது, அதற்கான புள்ளி விவரங்களை வெளிப்படுத்துவது எல்லாம் அரசியல் நடவடிக்கைகள். இவையெல்லாம் தேர்தல்கால நிகழ்ச்சிகளைப்போலவே உள்ளன. ஒரு சிறிய மாற்றம் என்றால், தேர்தல் மேடைகளுக்குப் பதிலாக பாராளுமன்றத்தில் அவை பட்டியற்படுத்தப்படுகின்றன வெளிப்படுத்தப்படுகின்றன.

ஆகவே அவை காற்றில் கரைந்து விடாமல் வரலாற்றில் இறக்கம் செய்யப்படுகின்றன. என்பதால் அடுத்த கட்டமாக அவை சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளன என உணரலாம். இதையே மக்களும் எதிர்பார்க்கிறார்கள். சட்டத்தின் முன் குற்றவாளிகள், தவறானவர்கள், நாட்டைக் கெடுத்தவர்கள் நிறுத்தப்பட வேண்டும். அதற்கு முன் அவர்களை நிர்வாணப்படுத்துவது நல்லதே.

அதேவேளை வரவு செலவுத்திட்டத்தில் மக்களைக் குறித்து, உற்பத்திப் பொருளாதாரம் குறித்து மேலும் சிந்திக்கலாம். உதாரணமாக, அரசாங்கம் வாகனங்களுக்கான வரியை உச்சமாக்கியிருக்கிறது. இதில் ஒரு சிறிய நெகிழ்ச்சியை பொருளாதார வளர்ச்சி கருதி ஏற்படுத்த வேண்டும். விவசாயம், மீன்பிடி மற்றும் கைத்தொழில் முயற்சிகளுக்குப் பயன்படுத்தப்படும் சுமைகாவி வாகனங்களுக்கும் உழவு மற்றும் அறுவடை, பதனிடல் அல்லது இறுதிசெய் இயந்திரங்களுக்கும் வரிக் குறைப்புச் செய்யப்படுவது அவசியமாகும். இங்கே வரி விலக்குக் கேட்கப்படவில்லை. வரிக்குறைப்பே கோரப்படுகிறது.

அப்படி அமையும் போது தான் உற்பத்தி சார் நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு அது உற்சாகத்தையும் சிரமக்குறைவையும் ஏற்படுத்தும்.

இதைப் போல எளிய மக்களின் போக்கு வரத்துக்கு உதவும் முச்சக்கர வண்டிகள், 150 ஊஊ க்கு உட்பட்ட மோட்டார்ச் சைக்கிள்கள் போன்றவற்றுக்கும் வரிக்குறைப்புச் செய்ய வேண்டும். இவை நாளாதாந்த உழைப்பு, வருவாயீட்டல், பணிக்குச் செல்லுதல் போன்றவற்றுக்கு ஏற்புடையதாக இருக்கும். மட்டுமல்ல, இவையெல்லாம் சாதாரண மக்களுக்குரியவை. ஆகவே மக்கள் நலன் அரசு — ஆட்சி என்ற வகையில் இவ்வாறான விடயங்களைக் குறித்துப் பொருத்தமாகச் சிந்திப்பது அவசியமாகும். கூடவே இளையோருக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்குவது முக்கியமானது.அதற்கு முதலீடுகள் அவசியம்.

முதலீட்டாளர்கள் பலரும் அதைச் செய்வதற்கு ஆர்வமாக உள்ளனர். உள்நாட்டிலும் உள்ளனர். புலம்பெயர்ந்தோரும் ஆர்வமாக உள்ளனர். ஆனால், அவர்கள் தங்களுடைய முதலீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் நடைமுறைப் பிரச்சினைகள், நிர்வாக இழுபறிகள், அரசியற் பேரங்கள் எல்லாம் தடையாக உள்ளன. இவற்றைச் சீராக்கம் செய்வதற்கான பொறிமுறை ஒன்றை அரசாங்கம் உருவாக்கினால் புதிய தொழிற்துறைகள் பெருகக் கூடிய வாய்ப்புகள் உண்டு. குறிப்பாக இதற்காக சிறப்பு அலகு ஒன்று (A special Unit) உருவாக்கப்படுவது கட்டாயமானது.

முதலீட்டாளர் ஒருவர் அல்லது ஒரு கொம்பனி அதற்கான கோவையைச் சமர்ப்பித்தால், அதைப் பொறுப்பேற்று, பரிசீலித்தபின் தேவையான திணைக்களங்களோடு தொடர்பு கொண்டு உரிய அனுமதிகளை விரைவாகப் பெற்றுக் கொடுக்க வேண்டும் அந்தப் பிரிவு. இப்போதுள்ள நிலைமை அப்படியானதல்ல. ஏராளமான இழுபறிகள், தாமதப்படுத்தல்கள், தட்டிக் கழிப்புகள் நிர்வாக ரீதியாக உள்ளது. இதை மாற்றியமைக்க வேண்டும்.

இப்படிப் பல விடயங்களில் அரசாங்கம் கவனத்தைச் செலுத்தும்போதுதான் பொருளாதார வளர்ச்சியும் மீட்சியும் ஏற்படும். அடுத்த ஆண்டுப் பாதீட்டுக்கு முன் அரசாங்கம் ஒரு மறுசீரமைப்பு நடவடிக்கையில் (Restructuring action)னில் ஈடுபட வேண்டும். அது கட்டாயமானது.

அரசாங்கத்திற்குள்ள பொறுப்புகள் அதிகம். கடந்த 75 ஆண்டு காலக் குப்பையை அகற்றுவதென்பது எளிதல்ல. ஆனாலும் அதைச் செய்வதாகவே அது தன்னைப் பிரகடனப்படுத்தியுள்ளது. உறுதியின் முன்னே நிறுத்தியிருக்கிறது. மக்களின் எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் அதன் மீதே கட்டப்பட்டுள்ளது

கடந்த (ரணில்) அரசாங்கம் வரியிறுக்கம், தொழிலின்மை, புதிய வாய்ப்புகளைத் தேடுவதில் சிரத்தின்மை போன்றவற்றினால் அழுத்தங்களை உருவாக்கியது. இதனால் பலரும் நாட்டை விட்டு வெளியேறினர். அப்படி வெளியேறுவதையே ரணிலும் விரும்பினார். இது மிகப் பெரிய தவறாகும். ஒரு நாட்டின் வளங்களில் முக்கியமானது மனித வளம். அதிலும் உழைப்பாளர்கள், இளையோர், திறனாளர்கள், துறைசார் வல்லுனர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதும் வெளியேற்றப்படுவதும் மிகத் தவறானது. பாதகமானது.

ஆனால், அதையே அன்றைய அரசாங்கம் ஊக்குவித்தது. கால் நூற்றாண்டுக்கு மேலாக ஒருவரை வளர்த்து, ஆளாக்கி, துறைசார் தொழில்சார் வல்லுநராக உருவாக்கியபின் அவரை வெளியே விடுவதும் அவர் இன்னொரு நாட்டில் சென்று அந்த நாட்டுக்காக உழைப்பதும் எவ்வளவு இழப்பாகும். அதேவேளை எந்தச் செலவுமே இல்லாமல் பிற நாடுகள் அந்தத் திறனாளரை — உழைப்பாளரை தமக்குப் பயன்படுத்திக் கொள்கின்றன. இதை புதிய அரசாங்கம் மாற்றியமைக்க வேண்டும். இந்த நாட்டை விட்டுச் சென்றவர்களும் இந்த மண்ணுக்கு வரும் வகையில் ஆட்சியை — பொருளாதாரத்தை — வாழும் சூழலை மாற்ற வேண்டும். இதற்கெல்லாம் அடிப்படையானது பாதீடாகும். (22ம் பக்கம் பார்க்க)

Friends MATRIMONY

www.friendsmatrimony.com
+1 647 709 1761 | +1 647 709 1536
+1 647 700 7208 | +1 416 477 6854
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2

## மணமகள்

**ID08121216 F**
24yrs, 5'3" , Single , Makam , N/A Sevai , Diploma , Tba , Canada

**ID08121215 F**
27yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Bank Officer , Canada

**ID08121211 F**
35yrs, 5'4" , Single , Makam , 10 Sevai , Masters Degree , TBa Canada

**ID08121209 F**
28yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Ph.D , Doctor , India

**ID08121208 F**
36yrs, 5'2" , Single , Makam , 9 Sevai , Bachelors.. , Clerk , Canada

**ID08121207 F**
30yrs, 5' , Single , Revathi , Sevai , Bachelors.. , Accountant , Sri Lanka

**ID08121204 F**
31yrs, 5'4" , Single , Uthiram , 7 Sevai , Bachelors.. , Residency.. , Canada

**ID08121199 F**
30yrs, 5'3" , Single , Poosam , 1 Sevai , Bachelors.. , Medical Lab.. , Canada

**ID08121198 F**
30yrs, 5'8" , Single , Visaakam , N/A Sevai , Bachelors.. , CRA- , Canada

**ID08121197 F**
30yrs, 5'1" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Medical Doctor , Canada

**ID08121196 F**
25yrs, 5'5" , Single , Thiruvonam , 4 Sevai , Postgraduate.. , Finance Analyst , Canada

**ID08121193 F**
34yrs, 5'7" , Annulled , Thiruvaathirai , N/A Sevai , Bachelors.. , Toronto city.. , Canada

**ID08119603 F**
33yrs, 6'4" , Single , Makam , 10 Sevai , Bachelors.. , Software Engineer , Canada

**ID08119509 F**
28yrs, 5'4" , Single , Visaakam , 7 Sevai , Bachelors.. , Secretary , Canada

**ID08115839 F**
30yrs, 5'5" , Single , Visaakam , N/A Sevai , Bachelors.. , Human Resource.. , Canada

**ID08115124 F**
40yrs, 5'2" , Single , Uthiraadam , N/A Seva , Bachelors.. , Pharmacist , New Zealand

**ID08115839 F**
30yrs, 5'5" , Single , Visaakam , N/A Sevai , Bachelors.. , Human Resource.. , Canada

**ID08120732 F**
30yrs, 5'6" , Single , Chithirai , 7 Sevai , Masters Degree , Doctor , Sri Lanka

**ID08120728 F**
40yrs, 5'4" , Widowed , Not Specified , N/A Sevai , High School , Teacher , Canada

**ID08120727 F**
24yrs, 4'5" , Single , Avittam , 3 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08120723 F**
41yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , House of Nursing , Malaysia

**ID08120722 F**
32yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Nurse , Sri Lanka

**ID08120721 F**
23yrs, 5'2" , Single , Punarpoosam , N/A Sevai , Bachelors.. , Study , Sri Lanka

**ID08120718 F**
29yrs, 5'5" , Single , Chithirai , 10 Sevai , Masters Degree , Assistant.. , Canada

**ID08121189 F**
32yrs, 5'6" , Single , Rohini , N/A Sevai , Ph.D , Engineer , United States

**ID08121188 F**
39yrs, 5'2" , Divorced , Pooraadam , 4 Sevai , High School , No work , Sri Lanka

**ID08121186 F**
29yrs, 5'7" , Single , Chithirai , N/A Sevai , Postgraduate.. , Accounting.. , Canada

**ID08121185 F**
27yrs, 5'6" , Single , Aayilyam , N/A Sevai , Diploma , Office work.. , Sri Lanka

**ID08121182 F**
29yrs, 5'4" , Single , Thiruvaathirai , 12 Sevai , Bachelors.. , Development.. , Sri Lanka

**ID08121186 F**
29yrs, 5'7" , Single , Chithirai , N/A Sevai , Postgraduate.. , Accounting.. , Canada

## மணமகன்

**ID08121218 M**
32yrs, 5'7" , Single , Kettai , N/A Sevai , Diploma , Teacher , Sri Lanka

**ID08121217 M**
43yrs, 5'5" , Divorced , Poosam , Sevai , Bachelors.. , Maintenance.. , Canada

**ID08121214 M**
36yrs, 6' , Single , , Sevai , , Business , Canada

**ID08121213 M**
26yrs, 5'6" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Software developer , Sri Lanka

**ID08121206 M**
33yrs, 5'3" , Single , Thiruvonam , N/A Sevai , High School , Own business , Sri Lanka

**ID08121205 M**
32yrs, 5'5" , Single , Moolam , 10 Sevai , , , Sri Lanka

**ID08121202 M**
31yrs, 5'7" , Single , Anusham , 5 Sevai , Masters Degree , Banker , Sri Lanka

**ID08121195 M**
36yrs, 5'5" , Single , Swaathi , N/A Sevai , Diploma , Manager , Sri Lanka

**ID08121194 M**
44yrs, 5'3" , Single , Swaathi , N/A Sevai , Diploma , Pharmacist.. , Sri Lanka

**ID08121191 M**
26yrs, 5'6" , Single , Chathayam/sadayam , 7 Sevai , High School , Textile -.. , Sri Lanka

**ID08121190 M**
29yrs, 5'4" , Single , Thiruvaathirai , 10 Sevai , High School , Tyre shop.. , Sri Lanka

**ID08121168 M**
42yrs, 5'10" , Divorced Punarpoosam , N/A Sevai , Diploma , Own Company , Canada

**ID08120583 M**
32yrs, 5'10" , Single , Poorattathi , 9 Sevai , Bachelors.. , Project Engineer , Canada

**ID08120564 M**
33yrs, 5'11" , Single , Hastham , 8 Sevai , Bachelors.. , Website Administrator ,Canada

**ID08120356 M**
30yrs, 6' , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Engineer Electric , Canada

**ID08120270 M**
34yrs, 5'8" , Single , Thiruvaathirai , 10 Sevai , Bachelors.. , Data Analyst , Canada

**ID08120144 M**
35yrs, 5'9" , Single , Visaakam , 8 Sevai , Diploma , Own Business.. , Canada

**ID08119698 M**
33yrs, 6'4" , Single , Makam , 10 Sevai , Bachelors.. , Software Engineer , Canada

**ID08120481 M**
30yrs, 5'7" , Single , Poorattathi , 7 Sevai , Bachelors.. , Research Associate , Canada

**ID08116778 M**
37yrs, 5'9" , Single , Uthiram , 12 Sevai , Bachelors.. , Manager Financial.. , Canada

**ID08116404 M**
43yrs, 5'4" , Single , Makam , N/A Sevai , High School , Business , Sri Lanka

**ID08115828 M**
31yrs, 5'9" , Single , Mrigasheersham , 10 Sevai , Bachelors.. , Trading Associate , Canada

**ID08111978 M**
45yrs, 5'5" , Single , Anusham , 2 Sevai , High School , Magna INC , Canada

**ID08120734 M**
35yrs, 5'7" , Seperated , Not Specified , N/A Sevai , Masters Degree , Fama prodecsoen.. , Sri Lanka

**ID08121184 M**
47yrs, 5'7" , Single , Chathayam/sadayam , 9 Sevai , Masters Degree , Entrepreneur , Canada

**ID08121183 M**
36yrs, 5'10" , Single , Anusham , 5 Sevai , Diploma , Business , Sri Lanka

**ID08121190 M**
29yrs, 5'4" , Single , Thiruvaathirai , 10 S evai , High School , Tyre shop.. , Sri Lanka

**ID08121181 M**
35yrs, 6' , Single , Hastham , 1 Sevai , Postgraduate.. , TTC , Canada

**ID08121180 M**
49yrs, 5'6" , Single , Aswini , 9 Sevai , Masters Degree , Engineer , Sri Lanka

**ID08121178 M**
30yrs, 6'2" , Single , Thiruvonam , N/A Sevai , Bachelors.. , Software engineering , Sri Lanka

# வடக்கில் சுற்றுலா விருத்தியில் அரசாங்கம் அக்கறை காட்டுமா?

யுத்தத்தினால் அழிந்து சிதிலமடைந்திருக்கின்ற வடக்குப் பிரதேசங்களை அபிவிருத்தியினால் மேம்படுத்துவதும் அங்குள்ள மக்களை உளரீதியில் புது நிலைப்படுத்துவதும் ஒன்றாக நடக்க வேண்டும். யுத்தம் முடிந்து 15 ஆண்டுகள் கடந்த பிறகும் இவை சரியாக நடக்கவேயில்லை.

2013 — 2018 வரை ஐந்து ஆண்டுகள் வடக்கு மாகாணசபை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கைகளில் இருந்தது. அப்போதும் வடக்கின் அபிவிருத்தியைப் பற்றியும் பாதிக்கப்பட்ட மக்களின் மீள் நிலையைப் பற்றியும் பொறுப்பானவர்கள், பொறுப்பாகச் சிந்திக்கவில்லை. இதனால்தான் இன்னும் இங்கே ஏகப்பட்ட பிரச்சினைகள்.

புதிய (NPP) அரசாங்கம் எல்லாவற்றிலும் மாற்றங்களையும் புதுமைகளையும் செய்ய முயற்சிக்கிறது. என்பதால், வடக்கின் நிலைமைகளிலும் நியானமான அவசியமான மாற்றங்கள் எதிர்பார்க்கப்படுகிறது. அதைச் செய்ய வேண்டிய கடப்பாடு, மாற்றங்களை வலியுறுத்தும் அரசாங்கத்துக்கு உண்டு. அதை ஓரளவு உணர்ந்திருக்கிறபடியால் தான் வடக்கின் அபிவிருத்திக்கென 5000 பில்லியன் ரூபாயை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. வட பிராந்தியத்திற் சில சிறப்புத் திட்டங்களை விருத்தி செய்வதற்கும் முயற்சிக்கிறது.

வடக்கின் அபிவிருத்தியில் முக்கியமான ஒன்று, சுற்றுலாத்துறையை வளர்ப்பதாகும். சுற்றுலாத்துறையை மேம்படுத்திக் கொள்வதன் மூலமாக பிரதேச அபிவிருத்தியைச் செய்ய முடியும். பொருளாதார ரீதியிலும் வளர்ச்சியை உருவாக்கலாம். மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் இது உதுவும். ஒரே கல்லில் மூன்று காய்கள். பொதுவாகச் சுற்றுலாத் துறையில் பொருளாதாரம், பண்பாடு போன்றவற்றில் வளர்ச்சி ஏற்படுவதுண்டு. மக்களுக்கான தொழில் வாய்ப்புகளும் பெருகும். ஆகவே அரசாங்கம் வடக்கில் சுற்றுலாத் துறையை விருத்தி செய்வதைப் பற்றிக் கவனத்திற் கொள்ள வேண்டும். அதற்கான வளங்களும் வாய்ப்புகளும் வடக்கிற் தாராளமாகவே உண்டு.

1.இயற்றை வளங்களோடு இணைந்திருக்கும் சுற்றுலா மையங்களை அடையாளம் கண்டு, அவற்றை வளப்படுத்தி, சுற்றுலாவுக்கேற்ற மாதிரி வடிவமைப்பது. இதற்கு பூநகரி கௌதாரிமுனை மணல்மேடுகள், கௌதாரிமுனைக் கடற்கரை (Beach), வேலணைக் கடற்கரை, நெடுந்தீவு, இயக்கச்சி சுண்டிக்குளம் ஆனையிறவுக் கடனீரேரி பறவைகள் சரணாலயம் (Nature Park) மன்னார் கடற்கரைகள், முல்லைத்தீவு நாயாற்றுக் கடற்கரை, இரணைமடுக்குளம், வன்னேரிக்குளம் பறவைகள் சரணாலயம், காரைநகர்க் கடற்கரை (Casuarina Beach) போன்றவை உண்டு. இதை விட வேறு மையங்களையும் அடையாளம் காண முடியும். இவை ஏறக்குறைய மாலைதீவு, கியூபா போன்ற நாடுகளில் உள்ள சுற்றுலாவுக்கு நிகரானவையாக இருக்கும். இயற்கையோடிணைந்த உணவு முறைகளையும் இங்கே சேர்த்துக் கொள்வதாக இருக்கும்.

2.பண்பாட்டுச் சுற்றுலா (Cultural tourism)வுக்குரிய இடங்களை விருத்தி செய்வது. இது குறித்த பிராந்தியத்தின் பண்பாட்டு அடையாளங்கள், சொத்துகளின் மீது கவனத்தைக் குவிக்கும் வகையிலானது. இதற்கு நல்லூர், சந்நிதி, நயினாதீவு, கீரிமலை, மாவிட்டபுரம், மடு, திருக்கேதீஸ்வரம், புல்லாவெளி, பொன்னாலை, கந்தரோடை போன்ற இடங்களிலுள்ள வரலாற்றுச் சிறப்புடைய ஆலயங்கள், தேவாலயங்கள், மசூதிகள் மற்றும் பௌத்த சின்னங்கள் போன்றவற்றின் முக்கியத்துவத்தை மையப்படுத்தி அமைப்பதைப் பற்றிச் சிந்திக்கலாம்.



கூடவே இதற்குத் தோதாக வடக்கின் கலை வெளிப்பாடுகளைக் (கூத்து, நாடகம், நடனம், ஓவியக் கூடம்) காணக் கூடியவாறு செய்ய வேண்டும். கேரளாவின் கதகளி, கண்டிய நடனம் போன்றவை உதாரணம். இந்தச் சுற்றுலாவில் பண்பாட்டைத் தேடி அறிய விரும்புவோரும் ஆன்மீக யாத்திரிகர்களும் அதையொட்டிய சுற்றுலாப் பயணிகளும் அதிகமாக வரக்கூடும்.

3.காலனிய கட்டிடங்கள் மற்றும் அதையொட்டிய மரபுரிமைகளை மையப்படுத்திய சுற்றுலா. (Colonial architectural heritage tourism). இதற்கு ஏற்கனவே உள்ள யாழ்ப்பாணக் கோட்டை, ஊர்காவற்றுறைக் கோட்டை, மன்னார்க் கோட்டை, நெடுந்தீவில் உள்ள புராத கட்டிடங்கள், யாழ்ப்பாணம் பழைய கச்சேரி, சங்கானைத் தேவாலயம் மற்றும் மந்திரிமனை, சங்கிலியன் தோப்பு, மன்னார் அரிப்பு அல்லிராணி மாளிகை போன்ற புராதன சின்னங்களை மையப்படுத்த வேண்டும். அவற்றின் சூழலைச் சுற்றுலாவுக்குரியவாறு மாற்றியமைக்க வேண்டும். மேலும் பூநகரி, இயக்கச்சி, ஆனையிறவு, வெற்றிலைக்கேணி, பருத்தித்துறை போன்ற இடங்களில் உள்ள காலனித்துவ காலக் கோட்டைகள், வெளிச்ச வீடுகள் யுத்தத்தினால் சிதைவடைந்த நிலையில் காணப்படுகின்றன. இவற்றையும் மீளமைப்புச் செய்தால், அவையும் இந்த வகைச் சுற்றுலாவுக்கு பெரிதும் உதவும். இதற்கு ஹொலண்ட் அரசுடன் ஒரு உடன்பாட்டுக்கு வரலாம். அல்லது அந்த நாட்டின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும்.

4. இதற்கு அப்பால் புதிதாக சுற்றுலா மையங்களை உருவாக்குவது. உதாரணமாக, வடமராட்சியில் முள்ளிக்குளம் மருதங்கேணிக்கும் இடையிலுள்ள களப்பை அகழ்ந்து படகுச் சவாரிகளை உருவாக்குவது. இதற்காக வெளிநாட்டுக் கடனைப் பெற்றாலும் அது பயனுடையதே.

ஏனென்றால் அது செலவீனத்தை விடப் பன்மடங்கு வருவாயை ஈட்டித் தரக் கூடியது. அந்தக் களப்பு இயற்கை வளம் நிறைந்த அழகான சூழலில் அமைந்துள்ளது. பசுமைச் சுற்றுலாவாக இதை உருவாக்கலாம். அருகே வங்காள விரிகுடாவுடன் இணைந்த இந்து சமுத்திரமுண்டு. அதனுடைய கரை அழகான கடற்கரையகும். இங்கே கடலுணவும் கடற்கரைக் காட்சியும் மேலதிக வாய்ப்பாக உள்ளன.

இதைப்போல இன்னோரிடம், நெடுந்தீவு உட்பட அனலைதீவு, எழுவைதீவு, கௌதாரிமுனை போன்ற இடங்களுக்கான படகுச் சவாரிகளை உருவாக்குவது. இந்த இடங்கள் மிக அழகானவை. அங்கே சுற்றுலாப் பயணிகளுக்கான விடுதிகளையும் கலை மற்றும் விற்பனைப் பொருட்களையும் உருவாக்கினால் போதும். அந்த இடங்களும் அபிவிருத்தியடையும்.

5.வடக்கின் பிரத்தியேகமான அறிவுத்துறை, தொழிற்துறை சார்ந்த இடங்களை விருத்தி செய்தல். இவையும் ஒரு தொகுதி சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடியவையே. இவ்வாறு வடக்கின் சுற்றுலாவை பல வகையில் விருத்தி செய்யலாம் செய்ய வேண்டும். இலங்கையின் பிரதான வருவாயில் ஒன்று சுற்றுலாத்துறையாகும். அதற்கு வடக்கு மாகாணமும் தாராளமாகப் பங்களிக்க முடியும். சம நேரத்தில் வடக்கில் பல்லாயிரக்கணக்கானோர் சுற்றுலாவுடன் தொடர்புடைய பல்வேறு தொழில் வாய்ப்புகளைப் பெறக் கூடியதாகவும் இருக்கும்.

ஆனால், புதிய அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தில் வடக்கின் சுற்றுலாத் துறைக்கென சிறப்பான நிதி ஒதுக்கீடுகள் எதுவும் செய்யப்படவில்லை. அது குறித்த சிரத்தையைக் காணவும் முடியவில்லை. இது புதிய அரசாங்கத்தின் முதலாவது பாதீடு என்பதால், அடுத்த ஆண்டுகளில் இதைக் குறித்த அக்கறைகள் மேலெழுக் கூடும். அதைக்குறித்த சிந்தனை இருக்குமானால், எதிர்காலத்தில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யக் கூடியதாக இருக்கும்.

வடக்கு மாகாணசபையில் சுற்றுலாத் துறைக்குப் பொறுப்பாக இருப்போருக்கு இதைப் பற்றிய புரிதலோ கற்பனையோ போதாது. அவர்கள் வழமையான பாரம்பரியமான சில இடங்களை (மையங்களை)யே அடையாளப்படுத்தி வைத்துள்ளனர். அந்த இடங்கள் பலரும் பார்த்துப் பழகியவை என்பதை விட அனைவரையும் கவரக் கூடியவையும் அல்ல. புதிய இடங்களைத் தேடிக் காணும் முயற்சியோ, அவற்றைச் சுற்றுலாத்துறைக்கு ஏற்ற மாதிரி மேம்படுத்தக் கூடிய அக்கறையோ இல்லை. கேட்டால், தமக்கு நிதி ஒதுக்கப்படுவதில்லை என்று ஒற்றை வரியில் தமது பொறுப்பை முடித்துக் கொள்கிறார்கள். இந்த விமர்சனம் அவர்களைக் குற்றம் சாட்டுவதற்கானதல்ல. பதிலாக அவர்களுடைய பொறுப்பை உணர வைப்பதற்கும் அவர்களை முயற்சிக்குமாறு தூண்டுவதற்குமானதாகும்.

சுற்றுலாத்துறையின் அடிப்படைகளில் ஒன்று, கொண்டாட்டத்தையும் அறிவு ஊட்டலையும் வியப்பையும் சமனிலையில் அளிப்பதாகும். அதுவே தீராத கவர்ச்சியையும் தாகத்தையும் உண்டாக்குவது. பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டுவதாக இருத்தல். எண்ணும் தோறும்(22ம் பக்கம் பார்க்க)

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -





## புதிய கூட்டுக்கள்! பழைய பகைமைகள்!

(15ம் பக்கத் தொடர்ச்சி) மக்களைத் தேசமாகக் கட்டியெழுப்ப முடியும்? இது தானே கடந்த 15 ஆண்டுகளாக நடந்து வருகிறது? தமிழரசுக் கட்சி முன்னணி, புதிய கூட்டணி தவிர ஆங்காங்கே சுயேச்சைகளும் களமிறங்கும் வாய்ப்புக்கள் தெரிகின்றன. நாடாளுமன்றத் தேர்தலைப் போலன்றி உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சுயேச்சைகளுக்கு வெற்றி வாய்ப்புகள் அதிகமாக இருக்கலாம். தென்மாராட்சியில் ஒரு சுயேச்சைக் குழு அவ்வாறு களமிறங்கும் வாய்ப்புகள் தெரிகின்றன. வலிகாமத்திலும் சுயேச்சைக் குழுக்கள் இறங்க முடியும். இதில் சுயேச்சையாக நிற்கக் கூடிய சில அரசியல்வாதிகளோடு சுமந்திரன் உரையாட முற்படுவதாக ஊர்ஜிதமற்ற ஒரு தகவல் உண்டு. இப்படிப்பட்டதோர் பின்னணியில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நோக்கி உருவாகி வரும் புதிய கூட்டுக்கள் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் நோக்கத்தோடு உருவாக்கப்பட வேண்டும். ஆனால். அதைக் கட்சிகள் செய்ய முடியாது என்பது தான் தமிழ்த்தேசிய அரசியலில் உள்ள கொடுமையான யதார்த்தம்.

ஏனென்றால் தமிழ்மக்களை வாக்காளர்களாக விசுவாசிகளாக பகைக் குழுக்களாக துரோகிகளாக தியாகிகளாக ஆயுதக் குழுக்களாக மிதவாதிகளாக இன்னபிறவாகப் பிரித்து வைத்திருப்பதே கட்சிகள் தான். தாங்களே சிதறடிக்கும் ஒரு மக்கள் கூட்டத்தை தாங்களே திரட்டுவது எப்படி? வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பின் போது ஒரு தேசமாகத் திரண்டு முடிவெடுக்காத கட்சிகள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எப்படித் தமிழ் வாக்குகளைத் திரட்டப் போகின்றன?

அவர்கள் ஒன்றாக நின்று தேர்தலை எதிர்கொள்ளா விட்டாலும் பரவாயில்லை. ஆகக் குறைந்த பட்சம் அந்தந்த உள்ளூராட்சிப் பிரதேசங்களில் பகை தவிர்ப்பு அல்லது போட்டித் தவிர்ப்பு உடன்படிக்கை எதற்காவது போவார்களா? அதாவது ஒரு உள்ளூராட்சிப் பிரதேசத்தில் வெல்லக்கூடிய வேட்பாளருக்குப் போட்டியாக மற்றொரு தமிழ்த் தேசியக் கட்சி வேட்பாளரை நிறுத்தாமல் விடுவதன் மூலம் ஒரு தமிழ்த் தேசியக் கட்சியின் வெற்றியை உறுதிப்படுத்துவது செய்வார்களா? அதாவது கட்சி கடந்து தேசமாகச் சிந்திப்பார்களா?

## தமிழரசுக் கட்சியை மலினப்படுத்த அனுமதியோம்!

(24ம் பக்கத் தொடர்ச்சி) இவ்வாறு அவர்கள் கூறுவதில் என்ன அர்த்தம் உள்ளது. நாங்கள் ஒன்றும் சில்லறைக்கட்சி அல்ல. எம்மை யாரும் மலினப் படுத்தக் கூடாது. ஈழத் தமிழினத்திற்காக நாங்கள் மீள வும் கூட்டமைப்பா இயங்குவோம் வாருங்கள் என்றே இணக்கத்தின் இடிப்படையில் அழைப்பு விடுத்தோம். அதைவிடுத்து உங்களது கூட்டணி யுடன் நாங்கள் வரப்போவதாக சொல்ல வில்லை.

இந்த விவகாரத்தில் மிகவும் அப் பாவித் தனமாக நாங்கள் இருந்து விட்டோமோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால் நாங்கள் இப்போதும் கூறுகிறோம் கூட்டமைப்பில் இருந்து செயற்பட்டவர்கள் மீளவும் கூட்டமைப்பிற்கு வருவதற்கான கதவுகள் திறந்தே உள்ளன. அவர்கள் வராவிட்டால் தமிழரசுக் கட்சி மீண்டும் தனி வழியில் போவது இயல்பானது. ஆனாலும் தமிழ்த் தலைமைகளைக் கொண்ட கட்சிகளுக்கே தமிழ் மக்கள் தமது ஆதரவை வழங்க வேண்டும்.அதற்காக எங்களுக்கு பயம் என்றில்லை. தந்தை வழியில் வந்தவன் நான். தேசிய தலைவரின் கொள்கையில் நிற்கிறேன். எனக்கு பயம் கிடையாது.

ஆனால், தமிழர் நலன் சார்ந்து செயற்பட வேண்டியது அவசியம். அந்த அடிப்படையில் தான் சில முயற்சிகளை எடுத்துச் செயற்படுகிறோம் என்றார். கூட்டணியுடன் கூட்டு வைக்க வேண்டிய தேவை தமிழரசுக்கு இல்லை புளொட் அமைப்பில் இருந்தாலும் சித்தார்த்தன் தமிழரசு கட்சிக்காரன். அவரின் பூர்வீகம் தமிழரசு கட்சியே , அவரிடம் நேரடி யாகவே சொல்லி இருக்கிறேன். நீங்கள் கட்சியின் நலன் சார்ந்து சிந்திக்க வேண்டும் என கூட்டமைப்பாக செயற்பட நாம் தயார். ஆனால் கட்சி களின் கூட்டணிகளுக்குள் நாம் செல்ல தயார் இல்லை என தெரிவித்தார்.


NO. #1 ASTROLOGER, PSYCHIC & SPIRITUALIST



World Famous Indian Astrologer
PANDIT: SAI RAM

Face Reading, Palm Reading,
Horoscope & Date of Birth



SOLUTIONS & SUGGESTIONS:

OPEN 7 DAYS
9 AM to 7.30 PM

Black Magic
Evil Spirits
Jealousy
Health, Wealth
Business, Marriage
Drinking Problem
Love, Divorce
Visa Prob.

Education, Family
Employment, Court
Husband & Wife
Children Problem
Business Prob
Vasthu Prob
Real Estate
and all other

Call for 1 FREE QUESTION

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போதுகனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள் கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வதிவிடப் பிரச்சனைகள், வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்ணூறு நாவூறு, கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

100% GUARANTEE

+1 437-829-1722
2993 Islington Ave, North York, ON, M9L 2K9
(Major intersection: STEELES & ISLINGTON)



# உக்ரேன் ஜனாதிபதியை நேருக்கு நேர் எச்சரித்த டிரம்ப் என்ன நடந்தது?

அமெரிக்காவில் அதிபர் மாளிகை யான வெள்ளை மாளிகை வெளி நாட்டு பிரமுகர்களை சந்திக்கும் ஏற்பாடுகளுடன் ஒரு வழக்கமான நாளாக தொடங்கியது. யுக்ரேன் அதிபர் ஜெலன்ஸ்கியை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், வெஸ்ட் விங் வாசலில் மரியாதையுடன் வரவேற்றார். இரு தலைவர்களும் கைகுலுக்கிக் கொண்டனர்.

யுக்ரேன் ஊடகக் குழுவில் நாங்கள் ஓவல் அலுவலகத்தில் இருந்தோம். முன்பே திட்டமிடப்பட்டிருந்த வழக்கமான சம்பிரதாயங்களையும் சுமார் அரை மணி நேர கண்ணிய மான பேச்சையும் கண்டோம். ஜெலன்ஸ்கி டிரம்பிற்கு யுக்ரேனிய குத்துச்சண்டை வீரர் ஒலெக்சாண் டர் உசிக்கின் சாம்பியன்ஷிப் பெல் ட்டை வழங்கினார்.

ஜெலன்ஸ்கியின் உடையை டிரம்ப் பாராட்டினார். இதுவரை எல்லாமே இராஜதந்திர ரீதியில் அமைதியாக நகர்ந்தது. ஆனால் சில நிமிடங்களி லேயே நிலைமை முன்னெப் போதும் இல்லாத வகையில் மாறியது. அன் பான தொனி கோபமாகவும் குழப்ப மாகவும் மாறியது. உரத்த குரல் களையும், கோபம் கொப்பளிக்கும் கண்களையும், எதிர்பார்ப்புகளுடன் இருந்த முகத்தையும் உலக தொலை க்காட்சிகளின் கேமராக்கள் படம் பிடித்தன.

உலக தொலைக் காட்சிகளின் கேமராக்கள் முன்பாகவே, அமெரிக்க அதிபரும் துணை அதிபரும் யுக் ரேன் அதிபரை கண்டித்தனர். யுக்ரே னின் போர் முயற்சிகளுக்கு உறு துணையாக இருந்த அமெரிக்கா வுக்கு ஜெலன்ஸ்கி போதுமான அளவு நன்றியுள்ளவராக இல்லை என்று அவர்கள் இருவரும் குற்றம் சாட்டினர்.

துணை அதிபர் ஜே.டி. வான்ஸ், போரை ராஜ தந்திர நகர்வுகள் மூலம் முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று ஜெலன்ஸ்கியிடம் கூறிய போது பதற்றம் அதிகரித்தது.

எப்படிப்பட்ட ராஜ தந்திரம்? என்று ஜெலன்ஸ்கி கேட்டார்.

ஓவல் அலுவலகத்திற்கு வந்து அமெரிக்க ஊடகங்கள் முன்பாகவே வாதிடுவது அவமரியாதை என்று யுக்ரேன் அதிபர் ஜெலன்ஸ்கியிடம் வான்ஸ் கூறினார். டிரம்பின் தலை மைக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என்று அவர் வலியுறுததினர்.

அறையில் இருந்த பத்திரிகையாளர் கள் ஒரு அசாதாரண நிகழ்வை தொடர்ந்து அதிர்ச்சி மேலிட பார்த் துக் கொண்டிருந்தனர்.

`நீங்கள் போதும் போதும் எனும் அளவுக்கு பேசி விட்டீர்கள். நீங்கள் இதில் வெல்லவில்லை.' என்று ஒரு கட்டத்தில் ஜெலன்ஸ்கியிடம் டிரம்ப் கூறினார்.

நீங்கள் நன்றியுடன் இருக்க வேண் டும். இந்த ஆட்டத்தில் தொடர்ந்து நீடித்திருக்க உங்களிடம் ஏதும் இல்லை.' என்றார் டிரம்ப்.

`நான் விளையாடவில்லை,' ஜெலன் ஸ்கி பதிலளித்தார்.

`நான் மிகவும் உறுதியுடன் இருக் கிறேன் அதிபர் அவர்களே. நான் போரில் ஈடுபட்டுள்ள ஒரு நாட்டின் அதிபர்' என்றார் ஜெலன்ஸ்கி.

`நீங்கள் மூன்றாம் உலகப் போர் உரு வாகும் நெருக்கடியுடன் விளையாடு கிறீர்கள்.' என்று டிரம்ப் பதிலளித்தார்.

`நீங்கள் செய்வது நாட்டிற்கு இந்த நாட்டிற்கு மிகவும் அவமரியாதை யானது.' என்றார் டிரம்ப்.

`இந்த முழு சந்திப்பிலும் ஒரு முறை யாவது `நன்றி' என்று சொன்னீர்களா? இல்லை' என்று வான்ஸ் குறிப்பிட் டார்.

அமெரிக்காவுக்கான யுக்ரேன் தூதர் தனது தலையில் கைகளை வைத் துக் கொண்டு அந்த நிகழ்வுகளை நேரில் பார்த்துக் கொண்டிருந்தார். சில நிமிடங்களில் அங்கே சூழல் முற்றிலுமாக மாறியிருந்தது.

இது போன்ற எதையும் நாங்கள் இதற்கு முன்பு பார்த்ததே இல்லை என்று அமெரிக்காவைச் சேர்ந்த சக ஊடக நண்பர்கள் எங்களிடம் தெரி வித்தனர்.

`வெள்ளை மாளிகையில் இது போன்ற ஒரு காட்சியை கற்பனை செய்து பார்க்கவே முடியாது.' என்று ஒருவர் என்னிடம் கூறினார்.

செய்தியாளர்கள் ஓவல் அலுவலக த்தை விட்டு வெளியேறியதும், பலர் அதிர்ச்சியில் அசையாமல் நின்றிரு ந்தனர். சிறிது நேரத்திற்குப் பிறகு, தலைவர்களின் சந்திப்பில் நிகழ்ந்த பேச்சுவார்த்தை முழுமையாக வெள்ளை மாளிகையில் உள்ள பத்திரிகையாளர் அறையில் மறு ஒளிபரப்பு செய்யப்பட்டது. அதனை அங்கிருந்த பத்திரிகையாளர்கள் நம்ப முடியாமல் பார்த்துக் கொண்டிரு ந்தனர். அங்கே ஒரு குழப்பம் ஏற்பட்டது. திட்டமிடப்பட்டபடி செய்தியாளர் சந்திப்பு நடக்குமா அல் லது அமெரிக்காவிற்கும் யுக்ரேனு க்கும் இடையே கனிம வளங்கள் தொடர்பாக மிகவும் எதிர்பார்க்கப் பட்ட ஒப்பந்தம் கையெழுத்தாகுமா என்பது குறித்து உடனடி கேள்வி கள் எழுந்தன.

சில நிமிடங்களுக்குப் பிறகு, டிரம்ப் தனது ட்ரூத் சோஷியல் சமூக ஊடகப் பக்கத்தில் ஜெலன்ஸ்கி `அமைதிக்குத் தயாராக இருக்கும் போது திரும்பி வரலாம்' என்று பதிவிட்டார்.

வெள்ளை மாளிகையின் கிழக்கு அறையில் நடைபெறவிருந்த செய்தி யாளர் சந்திப்பு மற்றும் ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நிகழ்வு அதிகாரப் பூர்வமாக ரத்து செய்யப்பட்டது.

ஜெலன்ஸ்கி வெளியே வந்து அங்கே காத்திருந்த ஒரு எஸ்.யூ .வி. காரில் ஏறிய சிறிது நேரத்திலேயே அவரது தூதர் அவரை பின்தொடர்ந்தார். உலகம் ஒரு அசாதாரண தருண த்தை ஜீரணிக்கத் தொடங்கியிருந்த போது அவர்கள் அங்கிருந்து புறப் பட்டனர்.


முழு வீச்சிலான ஒரு வாக்குவாதம் நடந்து விட்ட போதிலும், விரை விலோ அல்லது சற்று கால தாமத மாகவோ ஒரு கனிம ஒப்பந்தத்திற் கான சாத்தியம் இருக்கவே செய் கிறது.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம் ஜெலன்ஸ்கியின் இந்த அமெரிக்க வருகை முற்றிலும் மாறுபட்ட காரணங்களுக்காக நினைவுகூரப் படும்.


அமெரிக்காவுக்கும் யுக்ரேனுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் எவ்வாறு நடக்கின்றன என்பதை உலகம் நேரடியாகவே கண்டது. அவை கடினமானவை, உணர்ச்சி பூர்வமானவை மற்றும் பதற்ற மானவை. இது இரு தரப்பினரு க்குமே கடினமான பேச்சுவார்த்தை என்பது தெளிவாகத் தெரிந்தது.




# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! எல்லா கஷ்டங்களும் நீங்கி மனதில் நிம்மதி உண்டாகும். முயற்சிகள் சாதகமானபலன் பெறும். வாகனங்களில் செல்லும் போதும், இயந்திரங்களை கையாளும் போதும் தீ, மின் சாரம் ஆகியவற்றிலும் மிகவும் கவனமாக இருப்பது நல்லது. வீட்டில் சுபகாரியங்கள் நடக்கலாம். திருமண முயற்சிகள் கைகூடும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். வியாபாரம், தொழிலில் ஏற்பட்ட தொய்வு நீங்கும்.





ரிஸபராசி அன்பர்களே! திருமணம் தொடர்பான முயற்சிகள் கைகூடும். வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். குடும்பத்தில் அமைதி உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே இருந்த இடைவெளி நீங்கும். இனிமையான பேச்சின் மூலம் எல்லாவற்றையும் நல்ல முறையில் செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த பிரச்னைகள் தீர்ந்து நல்லநிலை உண்டாகும்.





மிதுனராசி அன்பர்களே! எதிலும் முன் யோசனையுடன் செயல்படுவது நல்லது. வீண் விவாதங்களால் அடுத்தவர்களுடன் தகராறு உண்டாகலாம். எனவே கவனமாக பேசுவது நல்லது. முயற்சிகளில் தடை உண்டாகலாம். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். பிள்ளைகள் வழியில் இருந்த பிரச்னைகள் தீரும். முக்கிய நபர்களின் நட்பு உண்டாகும். வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும்.





கடகராசி அன்பர்களே! துணிச்சலான சில முடிவுகளை எடுப்பதன் மூலம் நன்மைகளை பெறுவீர்கள். கோபத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் நட்பு, உறவினர்களிடம் சுமூகமான நிலை நீடிக்கும். மனை, வீடு வாங்க எடுக்கும் முயற்சிகள் சற்று தாமதமாக நடக்கும். எதிலும் நிதானத்தை கடைப்பிடிப்பது நன்மை தரும். திருமண முயற்சிகள் கைகூடும். தடைபட்ட பணவரத்து தடை நீங்கி கைக்கு வந்து சேரும்.





சிம்மராசி அன்பர்களே! எதிலும் தயக்கமோ, பயமோ இல்லாமல் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். அவசர முடிவுகளை எடுப்பதை தவிர்ப்பது நல்லது. விரும்பதகாத ஆசைகள் உண்டாகலாம். கவனமாக இருப்பது நல்லது. அக்கம் பக்கத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. வெளிநாடு செல்வதில் எதிர்பாராத சிக்கல் ஏற்படலாம். கணவன் மனைவிக்கிடையே அடிக்கடி வாக்குவாதங்கள் உண்டாகலாம்.




கன்னிராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்னைகள் தீரும். குடும்பத்தினரால் நன்மை உண்டாகும். பொருள் சேர்க்கை உண்டாகும். தடைபட்ட பணம் கைக்கு வந்து சேரும். மரியாதையும், அந்தஸ்தும் உயரும். தந்தை மூலம் உதவிகள் கிடைக்க பெறுவீர்கள். புண்ணிய தலங்களுக்கு சென்று வருவீர்கள். காரிய வெற்றி உண்டாகும். தொழில் தொடர்பான பிரச்னைகள் தீரும். தொழில் வியாபார போட்டிகள் நீங்கும்.





துலாம்ராசி அன்பர்களே! உங்கள் மனதை வாட்டி வந்த சிக்கல்கள் தீரும். வெளிநாட்டு பயணங்கள் செல்ல நேரிடலாம். பண விஷயத்தில் கவனமாக இருப்பது நல்லது. புதிய வீடு கட்டும் பணி அல்லது பழைய வீட்டை புதுப்பிக்கும் பணிகள் நடைபெறும். கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். வழக்குகளில் சாதகமான பலன் காணப்படும். நீண்ட நாட்களாக இருந்த நோய் நீங்கும். தொழில் வியாபார போட்டிகள் விலகும். மற்றவர்களால் ஏற்பட்ட பழிசொல் நீங்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! எதிர்பார்த்த தகவல்கள் நல்ல தகவல்களாக வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வாகனம், வீடு மூலம் செலவுகள் அவ்வப்போது ஏற்படலாம். எதையும் செய்யும் முன் தயக்கம் உண்டாகலாம். குடும்பத்தில் திருமண வயதில் இருப்பவர்களுக்கு திருமணம் கைகூடும். பிள்ளைகள் உடல் நிலையில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் சற்று கவனமாக இருப்பது நல்லது.








தனுசுராசி அன்பர்களே! மனதுணிவு அதிகரிக்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். திருமண முயற்சிகள் சாதகமான பலன் தரும். புத்திரர்களுக்கு நன்மை உண்டாகும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்னை குறையும். புத்தி சாதூரியம் அதிகரிக்கும். காரியங்களில் தடைதாமதம் உண்டாகலாம். எதிலும் சரியான முடிவு எடுக்க முடியாமல் தடுமாற்றம் ஏற்படும். திடீர் செலவுகள் உண்டாகும்.




மகரராசி அன்பர்களே! எல்லா தொல்லையும் நீங்கி நன்மை ஏற்படும்.ஆன்மீக பயணம் செல்ல நேரிடும். குடும்பத்தில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். உறவினர்களுடன் தேவையற்ற வாக்குவாதம் உண்டாகலாம். வாகனங்களால் செலவும் ஏற்படும். உடல் ஆரோக்யம் உண்டாகும். வழக்கு விவகாரங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். எதிர்பார்த்த லாபம் குறையும்.




கும்பராசி அன்பர்களே! ஓயாத வேலையும் அலைச்சலும் இருக்கும். உடன் பிறந்தவர்களுடன் மனவருத்தம் ஏற்படும் விதத்தில் ஏதாவது சம்பவங்கள் நடக்கலாம். உறவினர் நண்பர்கள் உங்களை சரிவர புரிந்து கொள்ளாமல் உங்களை விட்டு பிரிந்து செல்லக்கூடும். திடீர் மனக்கவலை ஏற்படும். திருமணம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும்.




மீனராசி அன்பர்களே! பொருள் சேர்க்கையும் உடல் ஆரோக்கியமும் உண்டாகும். கடன் பிரச்சனைகள் தொல்லை தராமல் கட்டுக்குள் இருக்கும். தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். வாக்கு வன்மை அதிகரிக்கும். உடன் பிறப்புகளிடம் கவனமாக பேசுவது நல்லது. குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் நீடிக்கும். மனதுக்கு பிடித்தபடி பொழுதை கழிப்பீர்கள். கொடுத்த வாக்கை காப்பாற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# வடக்கில் சுற்றுலா விருத்தியில்

(19ம் பக்கத் தொடர்ச்சி) நடத்திக் கொண்டிருக்கின்றனர். அதை மாற்றிச் சுற்றுலாத்துறை அமைச்சிடம் வழங்க வேண்டும். அத்துடன் இந்த டீநயஉாக்குச் செல்லக் கூடிய போக்குவரத்துப் பாதையைச் சீராக்கி, போக்குவரத்தையும் குறைவான செலவில் உருவாக்கலாம். இந்த Beachக்கு அண்மித்ததாக மண்ணித்தலையில் சோழர் காலச் சிவன் கோயில் ஒன்றுள்ளது. அதனுடைய சிதைவுகளே எஞ்சியுள்ளன. ஆனால், சுற்றுலாப் பயணிகளுக்கு இந்த மாதிரி வரலாற்று எச்சங்கள் தான் ஈர்ப்புக்குரியவை. அங்கிருந்து 15 நிமிடத்தில் யாழ்ப்பாணத்துக்குப் படகில் செல்ல முடியும். அதற்கான இறங்குதுறை ஒன்றை அமைத்தால், உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இலகுவாக இந்த Beach இல் நிறைவர்.

இதைப்போல இயக்கச்சி சுண்டிக்குளம் ஆனையிறவுக் கடனீரேரியோடிருக்கும் Nature Parkகும் பறவைகள் சரணாலயமும் (Bird sanctuary) சற்று விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். சரணாலயத்தை நாம் ஒன்றும் செய்ய முடியாது. அதைப் பறவைகளே விரிவாக்க வேண்டும். ஆனால், அந்தச் சூழலை நாம் பாதுகாப்பாக வைத்திருப்பது அவசியம். அதைப் பார்க்கச் செல்லும் வழிகளைப் புனரமைப்புச் செய்ய வேண்டும். அங்கே 136 பறவை இனங்கள் உண்டு. 187 தாவரங்கள் இருப்பதாக ஆய்வு செய்திருக்கிறார்கள். ஒரு பக்கம் பறவைகள் தங்குவதற்கான வில்லுகளும் (குளங்களும்) நீண்ட வெளியும் உண்டு. ஓரம் நீளத்துக்கும் களப்புக் கடலும் கண்டற்காடுகளும். மறுபக்கத்தில் அலைமோதிக் கொண்டிருக்கும் இந்து சமுத்திரம்.

நமது பிரதேசத்துக்கு சுற்றுலாப் பயணிகள் வர வேண்டுமாக இருந்தால், அதற்குரிய சிறப்பம்சங்கள் அங்கங்கே இருக்க வேண்டும். அல்லது அவற்றை உருவாக்க வேண்டும். கொழும்பில் அமைக்கப்பட்டுள்ள தாமரைத் தடாகம் என்ற வணிகக் கட்டிடம் இவ்வாறு திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஒன்றாகும். அதைப் போல எல்லா இடங்களிலும் கட்ட முடியாது. அதற்கு மக்களிடமுள்ள தாங்குதிறன் இடமளிக்காது. ஆனால், வெவ்வேறு பிராந்தியங்களில் அந்தந்தப் பிராந்தியங்களின் வளங்கள், வாய்ப்புகளுக்கு ஏற்ற மாதிரி ஒவ்வொன்றையும் உருவாக்கலாம். அது அந்தந்தப் பிராந்தியங்களின் அடையாளங்களைக் கொண்டிருந்தால் சிறப்பு.

யுத்தம் முடிந்த பிறகு, மிக அதிகமானோர் வடக்கு நோக்கி வந்தனர். நீண்ட காலமாக யுத்தம் நடந்த ஒரு பிரதேசத்தை, யுத்தத்தினால் அழிந்த பகுதிகளை, யுத்த காலத்தில் முழுதாகவே மூடப்பட்டுத் தடை செய்யப்பட்டு, இருண்டிருந்த ஒரு பிராந்தியத்தைப் பார்ப்பதற்கு விரும்பினார்கள். யுத்தத்தின் எச்சங்களையும் வடுக்களையும் கண்டு திரும்பினார்கள். இது யுத்தம் முடிந்த பிறகான சூழல். இனியொரு புதிய யுகத்தைக் காண்பதற்கான காலம். அதற்கான அக புற விழிகளை நிறைக்கும் வகையில் இன்றைய நாளைய சுற்றுலா அமைய வேண்டும்.

சுற்றுலா மட்டுமல்ல, இன்றைய நாளை நாட்களும் சூழலும் அமைவது அவசியம். அதற்கான வாசல்கள் திறக்கப்படட்டும். வியப்பூட்டுவது. பார்க்க முன்பும் பார்த்த பின்பும் தேடலுக்கு உரியதாக இருத்தல். இவை இருந்தால் தான் பலரையும் கவர முடியும். இவையில்லாத சுற்றுலா மையங்கள் விரைவில் சலிப்படைய வைத்து விடும். ஆகவே சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடிய வகையில் சுற்றுலா மையங்களின் சூழலையும் அவற்றின் வரலாற்றுச் சிறப்புகளையும் புத்துணர் வாக்கம் செய்து கொண்டேயிருக்க வேண்டும். புதிய மையங்களை அறிமுகப்படுத்த வேண்டும். எப்போதும் பளபளப்பாக இருக்கக் கூடியவாறு நாம் சில பொருட்களையோ பாத்திரங்களையோ மினுக்கி, நேர்த்தியாக அடுக்கி வைப்பதில்லையா? அதைப் போல இந்தச் சுற்றுலா மையங்களை மினுக்கிக் கொண்டேயிருக்க வேண்டும்.

உலகம் விந்தைகளால் நிரம்பியுள்ளது. இயற்கையாகவும் செயற்கையாகவும் இந்த விந்தை உள்ளது. அவற்றைப் பார்ப்பதற்கும் ரசிப்பதற்கும் என்று மக்கள் பெருந்தொகை பணத்தைச் செலவழித்துப் பயணம் செய்கிறார்கள். கூடவே தங்களுடைய நேரத்தையும் செலவிடுகிறார்கள். அப்படிச் செல்வோரை நாமும் கவர்ந்திழுக்க வேண்டும் என்றால் அதற்கான ஈர்ப்பை உண்டாக்கக் கூடிய சுற்றுலாப்புள்ளிகள் உருவாக்கப்பட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். மட்டுமல்ல, இதொரு உலகளாவிய போட்டி என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். உலகில் பல நாடுகள் சுற்றுலாப் பொருளாதாரத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. அவற்றுடன் நாம் போட்டியிட வேண்டியுள்ளது. எனவே இதற்கமைய எங்களையும் எங்களுடைய சுற்றுலா மையங்களையும் மேம்படுத்தி வைத்திருக்க வேண்டியது அவசியமாகும்.

வடக்கில் சில சுற்றுலா மையங்கள் இயல்பாக, இயற்கையாக இருக்கின்றன. அவற்றை மேலும் விரிவாக்கிப் புதுக்குவது அவசியம். குறிப்பாக பூநகரி கௌதாரிமுனையில் உள்ள Beachசும் இயக்கச்சி சுண்டிக்குளம் ஆனையிறவுக் கடனீரேரியில் உள்ள பறவைகள் சரணாலயம் மற்றும் Nature Parkக்கும். போக்குவரத்துக்கு வாய்ப்பாக வீதிகளைப் புனரமைத்து, தங்குமிடம், உணவு போன்ற அடிப்படை வசதிகளோடு இவற்றை சற்று வளமாக்கினால், மிகச் சிறப்பான சுற்றுலா மையங்களாக மிளிரும்.

கௌதாரிமுனை Beach ஆழம் குறைந்த கடலைக் கொண்டது. மிக நீண்ட Beach. சுற்றயல், மணல் மேடுகளும் தாழும் புதர்களும் நிறைந்த அழகான இயற்கை அரண். நீராடுவதற்கும் நீந்திக் களிப்பதற்கும் அருமையான இடம். இதை இப்பொழுது படையினரே

# அரச பாதீடு:- மாற்றமா? ஏமாற்றமா?

(17ம் பக்கத் தொடர்ச்சி) அந்தப் பாதீட்டை விவாதித்து, வளப்படுத்துவதே ஆயிரமாயிரம் வாசல்களைத் திறக்கும். ஆம், சரியான ஒரு பாதீடு, நாட்டின் நெருக்கடியைத் திறக்கும் சிறப்பானதொரு திறவு கோலாகும். அநுர குமாரவின் (NPP)யின் கைகளில் அந்தத் திறவுகோலை வரலாறு ஒப்படைத்துள்ளது. அந்தத் திறவுகோலை திறப்பதற்குப் பயன்படுத்துவதா இல்லை பூட்டுவதற்கு உபயோகிப்பதா என்பதை அவர்கள் தீர்மானிக்க வேண்டும். வரலாறு அந்தப் பொறுப்பை அவர்களுக்கு அளித்துள்ளது. வரலாற்றுக்கு அவர்கள், தமது கடமைகளைச் செய்து முடிக்க வேண்டும்.

(8ம் பக்கத் தொடர்ச்சி) கொடுப்பனவுகளை அதிகரிக்க இம்முறை வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. விமானப்படை மற்றும் கடற்படைக்கு அவசியமான ஊர்திகளை கொள்வனவு செய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும், பொலிஸ் திணைக்களத்தின் வசதிகளை மேம்படுத்த 1000 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கீடு செய்திருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். மேலும், விமானப்டைக்கும் பொலிஸிக்கும் தலா 10,000 பேரை ஆட்சேர்ப்பு செய்ய பரிந்துரைக்கப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
**10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),**
**Scarborough ON M1B 3C6**
Tel: **416.949.0404** / Fax: **416.948.0303** • **info@sasilaw.ca** • **www.sasilaw.ca**

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com







# முப்படைகளுக்கான ஆட்சேர்ப்பு - எண்ணிக்கை குறைப்பு விடயங்கள் தேசிய பாதுகாப்பில் தாக்கம் செலுத்துவதாக குழப்பங்களை ஏற்படுத்த வேண்டாம்!

இராணுவம் உள்ளிட்ட முப்படை ஆட்சேர்ப்பு மற்றும் பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீடு குறித்து விசேட நிபுணர்களின் ஆலோசனைக்கமையவே தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. எனவே இவை தேசிய பாதுகாப்பில் தாக்கம் செலுத்துவதாக எவரும் மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்தக் கூடாது என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

செவ்வாய்கிழமை 04 மார்ச் 2025 இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் இராணுவம் தொழிற்துறை நிபுணத்துவம் மிக்கதாக மாற்றப்படும். இராணுவமானது அரசுக்கு சார்பானதாக காணப்பட வேண்டுமே தவிர, ஜனாதிபதிக்கோ பாதுகாப்பு செயலாளருக்கோ பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கோ சார்பாக செயற்படக் கூடாது. தேசிய பாதுகாப்பே முப்படைகளின் பணியாகும். அதற்கான தொழிற்துறையைப் பாதுகாக்க வேண்டும்.

இராணுவத்துக்குரிய பயிற்சிகளை நிறைவு செய்த பின்னர் தொழிற் பயிற்சியளிக்கப்பட வேண்டும் என்பது முன்னரே கலந்துரையாடப்பட்ட விடயமாகும். சிவில் யுத்தம் நிலவிய போது இராணுவத்துக்கான ஆட்சேர்ப்புக்கான எண்ணிக்கை தற்போதைய நிலைவரத்தின் அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.



அதற்கமைய 5 ஆண்டுகளுக்கான திட்டமிடல்களையே ஜனாதிபதி முன்வைத்துள்ளார். அதற்கமைய தொழிநுட்ப ரீதியான காரணிகளை அடிப்படையாகக் கொண்டே பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது, மறுபுறம் இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு தொடர்பான கரிசணையும் இதில் உள்ளடங்கும். எனவே பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் எவரும் கலவரமடையத் தேவையில்லை.

ஏதேனுமொரு பிரதேசத்தில் இராணுவ முகாம் நீக்கப்படும் போது அல்லது பொலிஸாருக்கு இடமாற்றம் வழங்கப்படும் போது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் கூறிக் கொண்டு ஊடகவியலாளர் மாநாடுகளை நடத்துவதற்கென குழுவொன்று உள்ளது.

விசேட நிபுணர்களின் ஆலோசனைக்கமையவே நாம் இந்த தீர்மானங்களை நடைமுறைப்படுத்துகின்றோம் என்பதை அவ்வாறானவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றார்.

# தமிழரசுக் கட்சியை மலினப்படுத்த அனுமதியோம்!

## தேசியத் தலைவரின் கொள்கையிலேயே பயணிக்கின்றேன் -சி.வி.கே

தமிழ் தேசிய கூட்டமைப்பாக செயற்பட தமிழரசின் கதவுகள் திறந்தே உள்ளதாகவும் தேசிய தலைவனின் கொள்கையிலேயே தான் பயணிப்பதாகவும் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் 04 மார்ச் 2025 செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை தமிழரசுக் கட்சியோடு ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய மூன்று கட்சிகளுமாக நான்கு கட்சிகள் இணைந்து கூட்டமைப்பாக செயற்பட்டு வந்திருந்தோம். ஆனால் கடந்த உள்ளூராட்சி தேர்தல் அறிவிக்கப்பட்ட காலத்தில் தனித்தனியாக போட்டியிட்டு கூட்டாக செயற்படுவதென தமிழரசுக் கட்சி தீர்மானித்தது.

ஆனால் அதனை தவறாக சித்தரித்து



தமிழரசு தனிவழி என்றவாறாக பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு கூட்டமைப்பில் இருந்து கட்சிகள் வெளியேறியிருந்தன. நாங்கள் கூட்டமைப்பை உடைக்க வேண்டுமென நினைக்கவில்லை. இப்போது கூட முன்னரைப் போல மீளவும் கூட்டமைப்பாக ஒன்று சேர்ந்து இயங்குதவற்கான அழைப்பையே விடுத்திருக்கிறோம்.

அந்த முயற்சியின் தொடராக கூட்டமைப்பில் இருந்த கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடி இருக்கிறேன். ஆனால் இக் கட்சிகளின் தலைவர்களை நான் சந்தித்த போது சாதகமாக பரிசீலிப்பதாக சொன்னவர்கள் மறுநாளே தாங்கள் ஒரு புதிய கூட்டணியை உருவாக்கியிருக்கின்றனர்.

இப்படி ஒரு திட்டம் அவர்களிடம் இருக்கிறது என்றால் அதனை நேரடியாகவே எங்களிடத்தே சொல்லியிருக்கலாம். அதை விடுத்து ஏமாற்றுவித்தை காட்டியமையே எமக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

நாங்கள் அவர்களிண் புதிய கூட்டணியை எதிர்க்கவில்லை. அது அவர்களது உரிமை. ஆனால் அவர்களின் செயற்பாடே எமக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை தான் நான் சொல்லி இருக்கிறேன். ஆனால் தாம் ஒரு கூட்டணியை அமைத்துள்ளதாகவும் எங்களது கட்சியின் மத்திய குழுவோடு பேசிவிட்டு வருமாறும் புளொட் தலைவர் சித்தார்த்தன் எனக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

(20ம் பக்கம் பார்க்க)

